Free Copy

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பங்குனி 23 | புதன்கிழமை | (06.04.2011) | பக்கங்கள் 12+IV | ஓசை – 189

Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

## வடக்கில் அதிகாரப் பரவலாக்கம் தெற்கில் உரிமைகள் நிராகரிப்பு



### ஐ.தே.கட்சிக்கு காலம் கடந்த ஞானம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையையும் ஏனைய 3 மாநகர சபைகளையும் இணைத்து கொழும்பு பெருநகரக் கூட்டுத்தாபனத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்குரிய அதிகாரத்தை அரசாங்கம் கைப்பற்றத் தாம் அனுமதிக்கப் போவதில்லை. உள்ளூராட்சி அதிகார சபையொன்றுக்குப் பொருத்தமானவர்கள் எனக் கருதப்படுபவரைத் தெரிவு செய்வதற்கான உரிமை (11ஆம் பக்கம் பார்க்க)

## அரச முகாமைத்துவ சேவை பணியாளர் படையணிக்கு நியமனம்

### 2500 பேருக்கு ஜனாதிபதி வழங்குவார்

(கொழும்பு)

அரச முகாமைத்துவ இணைந்த சேவை உத்தியோகத்தர்களாக 2500 பேர் புதிதாக நியமிக்கப்பட உள்ளதுடன், இவர்களுக்கான நியமனங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை வழங்கவுள்ளார். 25 மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2500 பேர் இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட உள்ளனர்.

இது தொடர்பான உத்தி யோகபூர்வ நிகழ்வு நாளை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது. அரச முகாமைத்துவ சேவைக்கான 2010 திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இப்புதிய நியமனங்களைப் பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டட ஒப்பந்தத்தில் மோசடியா?
# அடியோடு மறுக்கிறார் முதல்வர்

(யாழ்ப்பாணம்)



**யாழ்.மாநகர சபையினால் கஸ்தூரியார் வீதியில், சலவைக்குளப பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய ஐந்து மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கடைத் தொகுதி தொடர்பான ஒப்பந்தம் யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் உட்பட அனைவரது எழுத்து மூல அங்கீகாரத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.** (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் கடும் எதிர்ப்பையும் மீறி நிறைவேற்றம்

### எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதன் வெளிப்பாடாக நாடாளுமன்றிலிருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்துள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் ஏற்பாடுகள் திருத்தச்சட்டத்தை அரசாங்கம் (11ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்பில் மாற்றம்; பிரச்சினைக்கு நீதியான தீர்வு



(சென்னை)

தமிழ்மக்களுக்கு நீதியான அரசியல் உரிமை களை வழங்கக்கூடிய வகையில் இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வரும்படி இந்தியா இலங்கை அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

சென்னை தீவுத்திடலில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, துப்பாக்கிச் சூட்டில் தமிழக மீனவர்கள் சிலர் கொல்லப்பட்டது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

அப்பாவி மீனவர்கள் உயிர் பறிபோய்விட்டது. இதற்கு மேல் தமிழக மீனவர்கள் சுடப்பட மாட்டார்கள் என நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினை மிக முக்கியமானது. இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக நாங்கள் கொடுத்த உறுதிமொழிகளை எல்லாம் ஒன்றொன்றாக நிறைவேற்றி வருகிறோம்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்தியா சார்பாக பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. அவை மேலும் தொடரும் என்று உறுதி கூறுகிறேன். (11ஆம் பக்கம் பார்க்க)


## யாழ்.மாநகரசபை மீது நம்பிக்கை மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது

### நேற்றைய வாக்கெடுப்பில் நிரூபணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மாநகரசபை நிர்வாகத்தின் மீதும், நகரபிதாவின் மீதும் தாம் கொண்டுள்ள நம்பிக்கையை யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் மீண்டும் உறுதி செய்துள்ளனர். இம்மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இச்சபையின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானபோது, எதிர்க்கட்சி (11ஆம் பக்கம் பார்க்க)

## ஆசியாவில் பொலிஸ் வலையமைப்பு



### கோத்தபாயவின் புதிய யோசனை

#### இன்டர்போலுக்கு இணையாகச் செயற்படும்

(கொழும்பு)

இன்டர்போல் எனும் சர்வதேச பொலிஸ் அமைப்பைப் போன்று எதிர்காலத்தில் சார்க் வலய நாடுகளுக்கிடையில் சார்க் போல் எனும் அமைப்பை உருவாக்கும் யோசனை முன் மொழியப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் பொலிஸ் (11ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழக் கோரிக்கை பிரபாகரனுக்குச் சொந்தமல்ல

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ்மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தமிழீழம் என்ற தனிநாடு தான் சரியான தீர்வு என்பது பிரபாகரன் முன்வைத்த கோரிக்கை அல்ல அது 1976ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆகும். இந்த தனிநாட்டு இலக்கை அடைவதற்காகவே பல தமிழ் அரசியற்கட்சிகளும், பல விடுதலை இயக்கங்களும் தோற்றம் பெற்றன.

அந்தவகையில், அன்று நாம் தனிநாடு தான் தமிழ் மக்களுக்கான சரியான தீர்வு என்று கூறியது புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டல்ல என்பதை இப்போது தமிழ்மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ரி.என்.எல். தொலைக்காட்சியில் (12ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# சுற்றுநிருபங்கள் புறக்கணிப்பு உயர்கல்வி மாணவர்கள் பாதிப்பு

## யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பாடசாலை அதிபர்கள் சிலரின் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளின் காரணமாக யாழ். பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி, இம்முறை கல்வியமைச்சு புதிய சுற்று நிருபம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்தச் சுற்று நிருபத்திற்கமைய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் சித்தி அடையாத மாணவர்களும் உயர்தரம் கலைப்பிரிவில் பயில முடியும்.

ஆனால் தொடர்ந்து வரும் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி கணிதப் பாடத்தில் சித்தியடைய வேண்டும்.ஆனால், இன்று யாழில் சில முன்னணி பாடசாலைகளின் அதிபர்கள் தங்கள் பாடசாலையில் கணிதப் பாடம் சித்தியடையாத மாணவர்கள் தொடர்ந்து உயர்தரம் கற்ற அனுமதி வழங்க மறுக்கின்றனர். அதேவேளை தங்கள் பாடசாலையிலிருந்தும் விலகி வேறு பாடசாலைக்கும் செல்லுமாறு அறிவுறுத்துகின்றனர்.

மாணவர்களின் நன்மையை மையமாகக் கொண்ட கல்வியமைச்சின் சுற்று நிருபத்தினை மீறிய இத்தகைய அதிபர்களின் செயல்பாடுகளால் மாணவர்கள் மற்றும் பெற்றோரும் விரக்தி அடைந்துள்ளனர்.

இந்த விடயத்தில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு சுற்று நிருபங்களை அதிபர்களுக்கு வருடாந்தம் நினைவூட்டி மாணவர்களையும் பெற்றோர்களையும் இத்தகைய துன்பத்தில் இருந்து மீட்க முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.இதேவேளை, கணிதபாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பிரத்தியேக வகுப்புகளை பாடசாலைகளில் நடத்துமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பொம்மைவெளி அபிவிருத்திக்கு விசேட திட்டம் அமுலாகிறது


(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதற்கென யாழ்மாநகரசபையின் உறுப்பினர் அகமது சுல்தான் சுபியானின்வேண்டுகோளிற்கு இணங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 4கோடியே 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து பொம்மைவெளிப் பகுதியில் மீள் குடியேறிய முஸ்லீம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான குடிநீர் பிரச்சினை, வீதிகள் சீரின்மை போன்றன சீரமைக்கப்பட்டுள்ளதுடன்,

எஸ்.மானியா கல்லூரியில் மகுமுத் மண்டபம் உள்ளிட்ட சகல வகுப்பறைகளும் சீரமைத்தல், முஸ்லீம் வீதி சந்தை புனரமைப்பு போன்றனவும் மேற்கொள்ளப்படவுள்ளது. சின்னபள்ளிவாசல் தண்ணிற் தாங்கியின் மூலம் அப்பகுதியில் குளாய்மூலம் குடிநீர் வழங்கலும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (கா)



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இணையத்தள வடிவமைப்புக்கான போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்றபோது வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.விக்னேஸ்வரன் பரிசில்வழங்குவதனையும் முதலாம் இடத்தைப் பெற்ற வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவிகள் பாடசாலை அதிபருடன் நிற்பதனையும் காணலாம். (படம்:- மிதிலன்)


தமிழ் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு

இன்று மட்டும் 06.04.2011

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அழகிய சல்வார், மற்றும் கொட்டன் சாரிகள் (Cotton Saree) என்பன

சாவகச்சேரியில்

மாபெரும் மலிவு விற்பனை





இடம்:- "கலா காமெண்ட்" 16A, கண்டிவீதி, சாவகச்சேரி. (கொமஸியல் வங்கி அருகில்)

நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை

5000/= ற்கும் அதிகமாக கொள்வனவு செய்தால் 800/= பெறுமதியான With பிளவுஸ் கொட்டன் சாறி முற்றிலும் இலவசம்.

வாருங்கள் அள்ளுங்கள் மனநிறைவு பெறுங்கள்

(R/025)


# தீவகத்தில் வெளிச்ச வீடுகள்

(ஊர்காவற்துறை)

அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் உள்ள கடற்கரையோரங்களில் வெளிச்ச வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் நன்மை கருதி இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் மின்சார சபையின் உதவியுடனே இவ் வெளிச்சவீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எழுவைதீவு பகுதிகளிலேயே இவ்வெளிச்சவீடுகள் அமைக்கப்பட்டுவருவதாகவும் அனலைதீவு பகுதிகளில் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் அனலைதீவுப் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து விரைவாக அனலைதீவில் வெளிச்ச வீடுகளை அமைக்குமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (14)

# அராலியில் விபத்து மாணவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அராலி இந்துக்கல்லூரிக்கு முன்பாக இன்று பி.ப 2.30 மணியளவில் இடம்பெற்ற வீதிவிபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாய மடைந்துள்ள நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாடசாலையைவிட்டு வெளியே நின்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்று இவருடன் மோதியமையாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் விபத்தில் அராலி வடக்கைச்சேர்ந்த யோகநாதன் விதுசா (வயது-16) என்ற மாணவியே படுகாயமடைந்தவராவார். (மி)

# தீயில் எரிந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை குருநகரில் எரிகாயங்களுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாயாரான ரஜேஸ் லக்சிகா (வயது -22)என்ற பெண் நேற்றுக் காலையில் காலமானார். கடந்த ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தகராறு காரணமாக குறித்த பெண் தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தற்கொலை செய்யமுயற்சித்துள்ளார். எனினும் அயலவர்களால் காப்பாற்றப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

# திருப்பாடுகளின் காட்சி தொடரும் புனிதப்பணி

யாழ். திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான கடவுள் வடித்த கண்ணீர் என்னும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகி தொடர்ந்து 17ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது. தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினமானதால் அன்றைய தினம் ஆற்றுகை இடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்று நடிக்கின்ற இவ் வாற்றுகைக்காக கடந்த ஆண்டுகளைப் போல் இம்முறையும் 150 அடி நீளமான விசேட மேடை அமைக்கப்பட்டு வருகின்றது. திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருள்திரு. நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இவ்வாற்றுகைக்கு திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்கின்றார் இதற்கான இசையமைப்பை இசைத்தென்றல் ம.யேசுதாசன் வழங்குகின்றார்.

திருமறைக்காலாமன்றம் 1963ஆம் ஆண்டு முதல் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்றது. இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்றினை ஒவ்வொரு ஆண்டும் அக்காலத்தின் சமூகச் சூழல்களுடன் இணைந்து தயாரிப்பதால் இவ்வாற்றுகை ஆழ்ந்த அர்த்தம் பொதிந்ததாக அமைவதுடன், மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


இலவச கணினிப் பயிற்சி நெறி

இடம்:- "நவமங்கை நிவாஸம்" கோப்பாய் மத்தி

"நவமங்கை நிவாஸம்" மனநலம் குன்றிய பெண்களுக்கான சேவையை வழங்கிவருவதுடன், விரைவில் கணினிப் பயிற்சி நெறி, தையற்பயிற்சி நெறி என்பனவற்றை இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது.

கணினிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் கணினிபற்றிய முன்னறிவு இருந்தால் அதனையும் குறிப்பிட்டு சுயவிபரத் (BIO DATA) தகவல்களை 25.04.2011 இற்கு முன்னர் நவமங்கை நிவாஸம் (கல்வியி யற்கல்லூரிக்கு அருகில்) இராசவீதி, கோப்பாய் மத்தி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும், வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். (கிராம அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் விண்ணப்பிக்கவும்)

ஸ்தாபகர்

(R/026) "நவமங்கை நிவாஸம்" கோப்பாய்.

மனதை பொத்தல் குடிசையாக வைத்திராமல் எந்தப் புயலையும் தாங்கும் கோட்டையாக வைத்திருக்கவேண்டும்.

- மு.வரதராசனார் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## முதியோர் பாதுகாக்கப்படவேண்டும்

சிறுவர்களின் பராமரிப்பில் நாம் காட்டிவரும் அக்கறையை முதியவர்களின் பராமரிப்பிலும் செலுத்த வேண்டும்.

இவர்கள் முதியவர்கள்தானே இன்னமும் கொஞ்சக்காலம்தானே வாழப்போகிறார்கள் என்ற ஏனோ தானோ மனப்பான்மையில் இவர்களைக் கவனிக்காமலும் இருக்கமுடியாது.

யுத்த காலத்திலும் சரி, யுத்தத்திற்கு முன்னரும் சரி இவர்களின் இறுதிக்கால வாழ்க்கை ஆரோக்கியமானதாகவும், அவர்களுக்கு திருப்தியளிக்கக்கூடியதாகவும் இருக்கவில்லை.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் உறவுகளையும், உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த நிலையில், எவரும் கவனிப்பாரற்ற நிலையில் இருந்துவரும் முதியவர்களுக்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

தம் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டு அவர்களது உழைப்பில் உல்லாசமாக வாழலாம் என்று மனக்கோட்டை கட்டிய பலர் முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுந்த வரலாறும் உண்டு.

இதேநேரம் குடும்பங்களிலிருந்து தாம் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மனதில் ஒரு ஆதங்கம்.

இந்த ஆதங்கம் அவர்களை உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கும் போது அவர்கள் சஞ்சலப்படுவதையும் காணமுடிகிறது.

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி, அமுதூட்டி வளர்த்தவர்களை முதுமைப் பருவத்தில் வைத்து பராமரிக்காமல் விடுவது மிகவும் இழிவான செயலாகும்.

இவர்கள் தமது முதுமைக் காலத்தில் தமது இளமைக்கால வாழ்வை மீட்டுப் பார்க்கும்போது இப்படியும் ஒரு வாழ்வா வாழ்ந்தோம் என்று தங்களை ஒத்தவர்களிடம் கூறி மன ஆறுதல் அடைவதையும் காணமுடிகிறது.

தனிமையிலும், முதியோர் இல்லங்களிலும் பராமரிப்பற்ற தன்மையில் வசித்துவரும் இவர்களது நலன்களைப் பேணிப் பராமரிப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

முதியோர் இல்லங்களில் உள்ள முதியோர்களின் விடுதி வாழ்க்கை ஓரளவு சோபிக்கக்கூடியதாக இருந்தாலும், முழுமையடையக்கூடியதான திருப்தியை அவர்களுக்கு அளிப்பதாகத் தெரியவில்லை. இவர்களது வாழ்வில் வாட்டி வதைக்கும் ஏழ்மை, பிறரில் தங்கியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை, போஷாக்கின்மை, மருத்துவ வசதிகளின்மை போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தவேண்டிய நிலை உள்ளது.

முதியவர்களை இப்போது பராமரித்துவரும் அரச முதியோர் இல்லமானாலும் சரி, தனியார் முதியோர் இல்லமானாலும் சரி, இவர்களது அடிப்படையான அத்தியாவசிய தேவைகளை இனங்கண்டு அதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

போக்குவரத்திலும் சரி, வைத்திய சேவையிலும் சரி மற்றும் அவர்கள் தங்கள் தேவைகளுக்காக எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

இதற்கு மேலாக அவர்கள் எதிர்காலத்தில் தமது சொந்தக்காலில் நின்று தமக்குரிய வருவாயைத் தேடிக்கொள்வதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

முதியவர்களை அவர்களுக்குரிய தினத்தில் பாராட்டி கௌரவிப்பதுடன் மட்டும் அரச அதிகாரிகள் நின்றுவிடாமல், அதற்கும் அப்பால் சென்று அவர்களை நன்கு பராமரிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும். அப்படியானால்தான் அவர்கள் கௌரவிக்கப்படுவதிலும் அர்த்தம் இருக்க முடியும்.

-ஆசிரியர்-

# சன் ஸீ கப்பல் குடியேற்றவாசிகளை தடுக்கும் வாய்ப்பை தவறவிட்ட கனடா

## நஷனல் போஸ்ட் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த வருடம் சுமார் 500 இலங்கைத் தமிழர்களுடன் கனடாவை சென்றடைந்த எம்.வி. சன் ஸீ கப்பலைத் தடுத்த நிறுத்தக்கூடிய பல வாய்ப்புகளை கனடாவும் அதன் தோழமை நாடுகளும் தவறவிட்டிருந்ததாக கனடாவின் நெ'னல் போஸ்ட் பத்திரிகை மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

மிகக் கிட்டிய வாய்ப்பு கடந்த வருடம் மே 9 ஆம் திகதி கிடைத்தது. எம்.வி. சன் ஸீ கப்பல் தாய்லாந்து வளைகுடாவில் இருப்பதாக அவுஸ்திரேலியாவிலிருந்து புலனாய்வு தகவல்கள் கிடைத்தன. ஆனால் தாய்லாந்து கடற்பரப்புக்கு அப்பால் அக்கப்பல் இருந்ததால் அக்கப்பல் செல்ல அனுமதிக்கப்பட்டது.

அதன்பின் மே மாத இறுதியில் கம்போடிய கடற்பரப்பில் அக்கப்பல் இயந்திரக் கோளாறுக்குள்ளானது. அவ்வேளையில் கம்போடியாவின் உதவியை கனடா கோரியது. எனினும் கம்போடிய அரசாங்கம் அக்கப்பலை தடுக்கவில்லை என அதிகாரியொருவர் தெரிவித்ததாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் கப்பல் பயணியொருவரிடமிருந்து பக்ஸ் கடிதமொன்றை பெற்றதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

நூற்றுக்கணக்கான பயணிகளுடன் இக்கப்பல் கனடாவுக்கு சென்றுகொண்டிருப்பதாகவும், அது இயந்திரக் கோளாறுக்குள்ளானதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் அக்கடிதத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த மேற்படி ஐ.நா. முகவரமைப்பினால் முடியவில்லை.

ஒழுங்கமைக்கப்பட்ட மனிதக் கடத்தல் வரலாற்றில் மிக மோசமாக இரகசியம் பேணப்பட்டதொன்றாக இக்கப்பல் இருக்கலாம்.

"ஆனால் இக்கப்பல் ஆபத்துமிக்க பசுபிக் சமுத்திரத்தை கடப்பதை தடுக்கும் பல வாய்ப்புகள் இழக்கப்பட்டன. குடியேற்றவாசிகள் சுரண்டப்பட்டு லாபமீட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்க அரசாங்கங்களால் முடியாமல் போனதை இது விளக்குகிறது.

இக்கப்பல் சட்டக் கட்டுப்பாட்டுக்குரியது அல்ல எனத் தெரிந்த எமக்கு, அவுஸ்திரேலியாவுக்கு மற்றும் பலர இக்கப்பலை முற்று கையிட்டிருக்கலாம் என கனேடிய அதிகாரியொருவர் கூறியுள்ளார். தற்போதைய சட்ட வரையறைக்குள் எதையும் செய்வதற்கு அதிகாரமற்றிருப்பதாக அனைவரும் உணர்ந்தனர் என அவர் கூறியுள்ளார்.

# நாமல் ராஜபக்ஷவின் பெயரைப் பயன்படுத்தி விமானப் படைத் தளபதியை அச்சுறுத்தியவர் கைது



(கொழும்பு)

தான் ஜனாதிபதியின் புதல்வரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எனக்கூறிக்கொண்டு விமானப்படைத் தளபதிக்கு அழுத்தம் கொடுத்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுஇன்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இச்சந்தேக நபர் விமானப்படை தளபதிக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து, தான் நாமல் ராஜபக்ஷ என அறிமுகப்படுத்திக்கொண்டாரம். அதன்பின் விமானப்படை உயர் அதிகாரியொருவரின் இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு அச்சுறுத்தும் பாணியில் விமானப்படைத் தளபதிக்கு உத்தரவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நபரின் செல்லிடத் தொலைபேசி சிம் அட்டை மூலம் இந்நபரை கண்டறிந்த பொலிஸார், கடந்த வெள்ளிக்கிழமை அவரைக் கைது செய்து நேற்று கொழும்பு மேலதிக நீவான் பி.ரணசிங்க முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அதையடுத்து ஏப்ரல் 18 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

விமானப்படைத் தளபதி மேற்படி தொலைபேசி அழைப்பில் சந்தேகம் கொண்டு நாமல் ராஜபக்ஷ எம்.பியிடம் தொலைபேசி மூலம் இது தொடர்பாக கேட்டுள்ளார்.

அப்போது தான் விமானப் படைத் தளபதிக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கவில்லை என நாமல் ராஜபக்ஷ எம்.பி. உறுதிப்படுத்தினார். அதையடுத்து இவ்விடயம் குறித்து பொலிஸாருக்கு விமானப்படைத் தளபதி அறிவித்தார்.

# மீள்குடியேறியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடனாக வழங்கப்படவுள்ள ஆயிரம் மில்லியன் ரூபா

(கொழும்பு)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுய தொழில் கடன் வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கத்தினால் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஜி.ஏ. சமரசிங்க தெரிவித்தார்.

வட மாகாணத்தில் முல்லைத்தீவு கிளிநொச்சி யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 10,000 குடும்பங்களுக்கே சுயதொழில் முயற்சிகளுக்காக கடன் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர், வட மாகாணத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அரசாங்கம் இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இலகு கடன் வசதிகளை அறிமுகம் செய்வதன் மூலம் தமது வாழ்க்கையைப் பழைய நிலைக்கு கொண்டு செல்ல முடியும்.

மக்களுக்கு தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி சமூக நல்லிணக்கத்தையும் சமாதானமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இதற்காகவே ஜனாதிபதி அவர்கள் மீள் குடியேறிய மக்களுக்கு புனர்வாழ்வு அதிகார சபை ஊடாக 4 வீத வருட வட்டியில் 10 வருட தவணைக் காலத்தில் செலுத்தி முடிக்கும் வகையில் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது என்றார்.

# யுத்த காலத்தில் சொகுசாக வாழாமல் மக்கள் காலடியில் நின்று சேவைசெய்தோம்

## ஈ.பி.டி.பி. நல்லூர் அமைப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யுத்த காலங்களில் வெளிநாடுகளுக்குச் சென்று சொகுசு வாழ்க்கை வாழாமல் மக்களது காலடியில் மக்களோடு மக்களாக நின்று சேவை புரிந்தது ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியே என ஈழமக்கள் அக்கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

கதிர்ஒளி இளைஞர் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது கட்சியும் கட்சி உறுப்பினர்களும் மக்களுக்கான சேவையை தொடர்ந்து சளைக்காது செய்து வருவதுடன் மக்களுக்கு பயனளிக்கும் பல்வேறு நலத்திட்டங்கள், சுயதொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் நாம் தொடர்ச்சியாக அக்கறை காட்டிவருகின்றோம். மக்களுக்கான நலத்திட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு எமது தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் செயற்பாடுகளுக்கு ஒத்தாசையாக இருப்பதன் மூலம் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மி)

## யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீடத்திற்கு

# பேராசிரியர் வித்தியானந்தன் துணைவேந்தராக இருந்த காலத்திலேயே திட்டமிடப்பட்டது

### யாழ்.பல்கலைக்கழகம் அறிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையும் பேரவையும் பொறியியல் பீடமொன்றை கிளிநொச்சியில ஸ்தாபிப்பதென்றும் அதற்கான ஆரம்பவேலைகளை இயன்றளவு விரைவில் தொடங்குவதென்றும் தீர்மானித்துள்ளன. பொறியியல் பீடமொன்று யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் தொடங்கப்படுவதற்கான திட்டங்கள், பேராசிரியர் வித்தியானந்தன் உபவேந்தராக இருந்த காலததிலேயே (1979 ஆம் ஆண்டு) தீட்டப்பட்டன. இன்று யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பது சம்பந்தமாகப் பல்கலைக்கழகப் பதிவாளர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1979 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் T.சிவப்பிரகாசபிள்ளை தலைமையில் பேராசிரியர் அ.துரைராசாவையும் அங்கத்தவருள் ஒருவராகக் கொண்டு அமைக்கப்பட்ட ஐந்து அங்கத்தவர் கொண்ட கல்வியாளர் குழுவொன்று, பொறியியல் பீடமொன்று நிறுவப்பட வேண்டுமென்றும், அப்பீடம் கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டுமென்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்ட மூதவையும் பேரவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கான வேண்டுகோளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்தது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவ்வேண்டுகோளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்கென நான்கு தொழில்சார் நிபுணர்களையும் யாழ்பல்கலைக்கழக உபவேந்தர் அல்லது அவர் பிரதிநிதியொருவரையும் உள்ளடக்கிய ஐந்து அங்கத்தவர் கொண்ட குழுவொன்றை நியமித்தது. அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் சார்பில் பேராசிரியர் க.குணரத்தினம் அவர்கள் இக்குழுவின் அங்கத்தவராகச் செயற்பட்டார். இக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்மொழிவை ஆராய்ந்து அதனை ஏற்றுக்கொண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்று ஆரம்பிக்கப்பட்பட வேண்டுமென்றும் அது கிளிநொச்சியில் அமைய வேண்டுமென்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு 1988 ஆம் ஆண்டு பரிந்துரை செய்தது.

பேராசிரியர் துரைராசா 1990 ஆம் ஆண்டு உபவேந்தராகப் பதவியேற்ற பின்னர் பொறியியல் பீடம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளைத் தொடங்கவும் பீடத்தின் அமைப்பு பற்றிய விபர அறிக்கையொன்றை தயாரிப்பதற்கும் பேராசிரியர் V.நவரட்ணராசா பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டார். பேராசிரியர் நவரட்ணராசா தயாரித்த விபர அறிக்கைகள் பல்கலைக்கழகத்தின் மூதவையினதும், பேரவையினதும் ஏற்புடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கபட்பட்ட போதிலும், யாழ்ப்பாணத்தில் அன்று நிலவிய உள்நாட்டுப் போர் நிலைமை காரணமாக பொறியியல் பீடம் அமைப்பது பிற்போடப்பட்டது. பின்னர் 2002 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமாதான சூழலில் வெளிநாட்டில் வாழும் திரு.பரதன் எனபவர் கேம்பிரிட்ச் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இருவரின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்றைத் தொடங்குவதற்கான முன்மொழிவொன்றை அரசாங்கத்தினரிடம் முன்வைத்தார்.

அதேகாலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையால் பேராசிரியர் குமாரவடிவேல் தலைமையில் நியமிக்கப்பட்ட அறுவர் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடம் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட வேணடுமென்று மீளவும் பரிந்துரை செய்ததுடன் அதற்கான விபர அறிக்கையையும் தயாரித்தளித்தது. பல்கலைக்கழகத்தின் மூதவையும், பேரவையும் இவ்வறிக்கையை ஏற்றுக்கொ்ணடு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அதனைச் சமர்ப்பித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பொறியியல் கற்கைக்கான நிலைக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை தொடங்குவதற்கான பரிந்துரையை வழங்கிய நிலைமையிலும், மீண்டும் தொடங்கிய போர் நிலைமையால் பொறியியல் பீடம் அமைப்பது கைகூடவில்லை.

இன்று போர் முடிவுற்ற நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையும் பேரவையும் தமது சமூகக் கடமையை நிறைவேற்றும் நோக்குடனும், பொதுவாக செலவினங்களை விவசாய பீடத்துடன் பங்கிடக்கூடிய வாய்ப்பையும், முன்னைய குழுக்களின் பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு, பொறியியல் பீடத்தை மிகவிரைவில் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் தொடங்குவதற்கான முடிவை எடுததுள்ளதுடன் அதற்கான விபர அறிக்கையைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்கு ஓரிரு வாரங்களில் சமர்ப்பிப்பதென முடிவு செய்துள்ளது ஏன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவும்

## பெற்றோர் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் அழகியல் பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவுவதாக மாணவர்களும், பெறறோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் அழகியற் பாடங்களான சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பல பாடசாலைகளில் நியமிக்கப் படவில்லையெனவும், சில பாடசாலைகளில் நியமிக் கப்பட்ட ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுச் செல்வதாகவும் அறியமுடிகின்றது.

இதேவேளை விவசாயம், மனைப்பொருளியல் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாககுறையும் பல பாடசாலைகளில் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மேற்படி பாடங்களினைக் கற்பதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இது விடயத்தில் கல்வித் திணைக்களத்தினர் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு மாணவர்களும், பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் (69)

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் 2011 ஆம் ஆண்டிற்கான கோட்டமட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை தொடக்கம் அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக உடற பயிற்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் விஷ்ணு தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நாளை ஆண், பெண்களுக்கான கரப்பந்துப் போட்டியும் 07 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் 08 ஆம் திகதி ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும் 09 ஆம் திகதி மென்பந்துப் போட்டியும் 10 ஆம் திகதி சதுரங்கப் போட்டியும் 12 ஆம் திகதி இறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் அறியத்தந்துள்ளார். (69)

# யாழ்.நகரை தூய்மையாக்கும் பணியில் மாநகரசபைத் தொழிலாளர்கள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் கழிவகற்றும் பணியை மாநகராட்சி மன்றம் தீவிரப்படுத்தியுள்ளது.

மாலை 6 மணிக்குப் பின்னர் நகரைத் தூய்மையாக வைத்திருக்கவும். சுகாதார வச தியை பின்பற்றவும் மாநகராட்சி மன்றத் தொழிலாளர்கள் தமது பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நகரைத் தூய்மையாக்கி, சேர்க்கப்படும் கழிவுப் பொருட்கள் இரவிரவாக அகற்றப்பட்டும் வருகின்றன.

அதனைவிட வடிகால்வாய்கள் மற்றும் கழிவுகள்ஓடும் வாயக்கால் என்பனவும் துப்புரவாக்கும் பணிகள் தினமும் நடைபெற்று வருகின்றன. (வி)

# வலயமட்ட விளையாட்டுப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் 15,19 வயது ஆண்களுக்கான கரம் போட்டி இன்று புதன்கிழமையும், பெண்களுக்கான கரம் போட்டி நாளை வியாழக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கலலூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதேவேளை 15,17,19 வயது பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதியும் 10 ஆம் திகதியும், 12 ஆம் திகதியும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (11)

# தாரணி குடியிருப்பு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தி - பூநகரி பிரதான வீதிக்கு அண்மையாக அமைந்துள்ள தாரணி குடியிருப்பிற்குச் செல்லும் வீதி மிக மோசமாக காணபடுவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மண் வீதியான இவ் வீதி மிக நீண்ட காலமாக திருத்தப்படாதுள்ளதால் துவிச்சக்கர வண்டிகள் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ் வீதியினை புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்திச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (69)

# அன்புள்ளம் கொண்ட பெருந்தகையீர்!

## ஓர் அன்பான வேண்டுகோள்



சங்குவேலி வடக்கு மானிப்பாயில் வசிக்கும் பாலகிருஷ்ணன் சாந்தகுமார் ஆகிய நான் அடையாளஅட்டை இல.590141941V மிகவும் ஏழ்மையான நிலையில் சுயதொழில் செய்து ஜீவனம் செய்துவருகின்றேன். எனது வருமானம் குடும்பச் செலவுக்கே போதுமானதாக உள்ளது. இந்நிலையில் எனது மனைவி சீதாதேவி அடையாளஅட்டை இல. 636132063 V என்பவர் வயிற்றுப் புற்றுநோய் காரணமாக பல வருடகாலமாக வைத்தியங்கள் செய்தும் மாறாத நிலையில் மிகவும் துன்புற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார். அவரின் வயிற்றில் பாரிய சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றும், அதுவும் தனியார் வைத்தய சாலையில் தான் செய்ய முடியும் என்றும் வைத்தியர்கள் கூறுகன்றார்கள். அதற்குப் பதினைநது லட்சம் (15,000,00) ரூபா வரையில் செலவு ஏற்படும் என்றும் கூறுகின்றார்கள். ஆனால் எனது நிலையில் அப்பணம் சேர்ப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. ஆகவே அந்த சத்திர சிகிச்சையைச் செய்து எனது மனைவியைக் காப்பாற்றுவதற்கு தங்களால் செய்யக்கூடிய பண உதவியைச் செய்து எனது மனைவியைக் காப்பாற்றுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் செய்யும் உதவியை என்னிடம் நேரடியாகவோ அல்லது ஹற்றன் நசனல் வங்கி கணக்கு இல.150020016001 என்னும் கணக்கிற்கோ வைப்பில் இடுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள
பா.சாந்தகுமார்

# பனை வெல்ல உற்பத்தியை அதிகரிக்க நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் பனை வெல்ல உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் பனை அபிவிருத்திச் சபையினால் பனைவெல்ல உற்பத்திக்கான உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.


இவ் உபகரணங்கள் கடந்த முதலாம் திகதி காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு மேறகு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் பனை, தென்னை வள அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

நாளாந்தம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரம் முதல் ஆயிரத்தி 500 போத்தல்கள் வரையிலான பதநீர் விற்கப்படாத நிலையில் நிலத்தில் வீணாக ஊற்றப்படுவதாகவும், இதனால் அங்கத்தவர்கள் உரிய வருமானம் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், கஷ்டப்படுவதாகவும் சங்கத்தின் இணையத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் அமைச்சரின் கவனத்திற்கு பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் அவர்களால் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைய பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதநீரை வீணாக்காது அதனை உரிய முறையில் பயன்படுத்தி, பனை வெல்ல உற்பத்தியை மேற்கொள்வதற்கு வசதியாக பனை வெல்ல உற்பத்திக்கான உபகரணங்களினை முல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள குறித்த சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர், பசுபதி சீவரத்தினம் இவ்விடயம் தொடர்பில் உடன் நடவடிக்கையினை மேற்கொண்டதன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் ஊடாக பனை வெல்ல உற்பத்திக்கான உபகரணங்கள் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேற்குறிப்பிட்ட தினத்தில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் இணையம் சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்தமை அங்குள்ள பணியாளர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிப்புற்ற கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு உதவும் முகமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. போரத்தின் 15 ஆவது ஆண்டு விழாவின்போது 'ஹரா' (Hair) நிறுவன பணிப்பாளர் யூ.எம்.பைஸ், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் நிதி வழங்குவதைக் காணலாம். (19)

## சிறப்பாக நடைபெற்று முடிந்த கற்கடதீவு அந்தோனியார் உற்சவம்

கற்கடதீவு புனித அந்தோனியார் தேவாலய தவக்காலத் தியானத் திருப்பலிப் பூசைகள் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்தத் திருப்பலிப் பூசைகளில் கடந்த சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நற்கருணை ஆராதனையும் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு இறுதித் திருப்பலிப் பூசையும் நற்கருணைச் சுற்றுப்பிரகாரமும் இடம்பெற்றது.

இந்த உற்சவத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவுப் பிரதேச அமைப்பாளர் ரஜீவ் கலந்துகொண்டதுடன், மன்னார் நாச்சிக்குடா, நெடுந்தீவு மற்றும் பிற இடங்களிலிருந்தும் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## குருத்துவ நினைவுநாள்

இலங்கையின் கிளரேசியன் சபையைச் சேர்ந்த குருக்களான அருட்பணி வரதன், மில்பர்-வாஸ் ஆகியோரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் 3 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதில் யாழ். கிளரேசியன் சபையில் யாழ். முதல்வர் அருட்திரு மொன்பேட் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இத் திருப்பலியில் அருட்தந்தையின் குடும்ப உறுப்பினர்களும், குருமட மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (21)

## புத்தாண்டு தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி தெல்லிப்பளைப் பொலிஸாரும் வலிவடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகமும் இணைந்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளையும் கலை நிகழ்வுகளையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல், பலம் பார்த்தல், கரப்பந தாட்டப் போட்டி, தலையணிச்சண்டை, கிறிஸ்மரம் ஏறுதல், போர்த் தேங்காய் உடைத்தல் உட்பட பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்துடனோ அல்லது தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டு அலுவலருடனோ தொடர்பு கொண்டு தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

## ஓய்வூதியம் பெறலாம்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் ஓய் வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத ஓய்வூதி யம் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான ஓய்வூதியப் பற்றுச்சீட்டு உரியவர்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## வாரத்தில் இரு தடவைகள் மட்டும் திறப்பதால் மகப்பேற்று தாய்மார் சிகிச்சை பெறுவதில் சிரமம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சந்தியிலுள்ள மகப்பேற்று மருத்துவமனை வாரத்தில் 2 நாட்கள் மாத்திரமே திறக்கப்படுவதால், அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மருத்துவமனையினூடான சிகிச்சை பெறுவது அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது.

வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், இராமநாதபுரம், மாவடி அமமன், மாயவனூர் ஆகிய பிரதேச மக்கள் இந்த வைத்தியசாலையினூடாகவே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாரத்தில் 2 நாட்கள் மாத்திரம் திறக்கப்படும் இந்த மருத்துவமனையில் காலை முதல் மாலை வரையே வைத்தியர்களால் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. எனினும், இதில் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே சிகிச்சை பெற்று வருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் அவசர நோயாளர்களைக் கூட கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கே கொண்டு செல்ல வேண்டியநிலை காணப்படுவதாகவும், இதிலும் போக்குவரத்துப் பாதைகள் சீரற்றதாகக் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து, மருத்துவமனையை மேலும் 3 தினங்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

## ஹாட்லிக் கல்லூரி வீதியை புனரமைக்க கோரிக்கை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீதியின் ஒரு பகுதி குன்றும் குழியுமாக இருப்பதால் அவ்வீதியூடாகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் பயணம் செய்வதாகவும், இவர்கள் சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். பல வருடங்களாக இராணுவ கட்டுப் பாட்டிலிருந்த குறித்த வீதி அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது. இவ் வீதிப் பகுதியில் ஹாட்லிக்கல்லூரி, பெண்கள் உயர்தரப் பாடசாலை, கிறிஸ்தவ தேவாலயம் என்பன காணப்படுவதுடன், கரையோரப் பகுதிமக்களின் அன்றாடப் பாவனையாகவும் இவ்வீதி காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்களும், மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## அதிர்ஷ்டலாப சீட்டுக் குலுக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தால் விற்பனை செய்யப்பட்டு வந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டுக் குலுக்கல் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார்.

## பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆழியவளை அருணோதயா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொளள வுள்ளார். மேலும் வடமராட்சி கிழக்கு 153 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எஸ்.ரூபசிங்கம், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (100)

## ஆதினியின் இன்றைய பலன்

(06.04.2011 – புதன் கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 23

இராகுகாலம் 12.08–1.38, சுபநேரம் 4.38 –6.08

திருதியை பி.இ 1.22, பரணி மு.இ.9.28, சித்தாமிர்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– புகழில் விருப்பம், பெரியோர் சேர்க்கை, சுபச் செலவு.

ரிஷபம்:– முயற்சி பலிதம், ஆர்வ மிகுதி, அதிகலாபம்.

மிதுனம் :– காரிய சித்தி, பொருள் வரவு, மதிக்கப்படல்.

கடகம்:– அதிகலாபம், மனமகிழ்ச்சி, பொருள் வரவு.

சிம்மம்:– பகைவரால் தொல்லை, திருடர் பயம், குடும்பத்தில் குழப்பம்.

கன்னி :– வேலைப்பழு, அமைதியின்மை, பிள்ளைகளால் தொல்லை.

துலாம் :– மனப்பயம், எதிரிகள் தொல்லை, மனக்குழப்பம்.

விருச்சிகம்:– சோம்பலால் கேடு, நட்டம், அவமானப்படல்.

தனுசு:– அதிக செலவு, குடும்பச் சிக்கல், நோய்த் தாக்கம்.

மகரம்:– பெருமைப்படல், காரிய சித்தி, பெரியோர் உதவி.

கும்பம் :– ஏமாற்றப்படல், பொருள் இழப்பு, அரச பயம்.

மீனம்:– முற்கோபம், காரியக்கேடு, நண்பர் பகை.

# வடபகுதிக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதி அரசாங்கத்திற்கெதிராக பயன்படுகின்றது

## அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி அரச விரோத நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார்.**

வடக்கில் இருக்கும் பெரும் பாலான அரச அதிகாரிகளும் அரசாங்கத்துக்கு விரோதமான முறையில் மக்களைத் திசை திருப்பவே முயற்சி செய்வதன் காரணமாக மக்களும் அரசாங்கத்தை நாடி வரத்தயக்கம் காட்டுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மன்னார் மாவட்டத்தின் உள் ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவானோர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிகழ்வு முசலியில் நடைபெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ரிசாத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கின் அபிவிருத்தி மற்றும் இன்னோரன்ன நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி, அமைச்சர்கள், அரசாங்கத்தின் ஏனைய நிதியுதவிகள் என்பன இப்பிரதேசங்களில் வழங்கப்படுகின்ற போதும் அந்த நிதிகள் அரசாங்கத்துக்கெதிராகவே அதிகாரிகளால் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் அரசாங்கத்தை நாடிச் செல்லாதவாறு பொதுமக்களும் இங்குள்ள அரச அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். அரசாங்கத்தின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடையாமல் அவர்கள் குறுக்கே நின்று தடுக்கின்றனர்.

அத்துடன் பெரும்பாலான அரச அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக நடந்து கொள்வது மட்டுமன்றி, பொதுமக்களையும் அதன் பால் திசை திருப்ப முயற்சிக்கின்றனர். அதனை கவனத்தில் எடுத்து அதற்குச் சரியான முறையில் பதில் நடவடிக்கையொன்றை நாங்கள் எடுக்கத் தவறினால் இப்பிரதேசங்களில் மீண்டுமொரு யுத்தம் வெடிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆறாவது பகுதிக்கடன்

(கொழும்பு)

இலங்கைக்கு ஆறாவது பகுதிக் கடனை வழங்குவதற்குச் சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்தது. இதனடிப்படையில் 218.3 அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையிலும் அதன் பொருளாதார ஸ்திரத் தன்மையைக் கட்டியெழுப்பும் நோக்கிலும் சர்வதேச நாணய நிதியத்தினால் இந்தக் கடனுதவி வழங்கப்படுகின்றது.

# தமிழ் மக்களின் தேசிய அரசியல் உணர்வு மரணிக்கவில்லை என்கின்றார் பஸீர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைந்தே இருக்க வேண்டும் தங்களைத் தாங்களே ஆள வேண்டும் என்ற தேசிய அரசியல் உணர்வு புலிகள் இல்லாத போதிலும் தமிழ் மக்களிடம் அப்படியே உள்ளன. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பிரதியமைச்சருமான பஸீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் பேசும் போது இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் தேசிய அரசியல், புலிகள் இருந்தபோதிலும் இல்லாத போதிலும் அப்படியே உள்ளன.

ஆனால் முஸ்லிம்களின் தேசிய அரசியல் என்றபோக்கு மங்கிப்போய் ஊர் அரசியல் என்ற குறுகிய வட்டத்திற்குள் வந்திருக்கின்றது.

இது முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்காலத்தை பெரிதும் பாதிக்கும்.

தமிழ் மக்களின் உணர்வின் வெளிப்பாடுதான் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் முடிவுகள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# படையினருக்கிடையே ஏற்பட்டமோதல் பதினொரு பேர் படுகாயமடைந்தனர்

(கொழும்பு)

களுத்துறை நகரில் இலங்கைப் படையணிகளுக்கிடையே இடம்பெற்ற மோதலில் ஆயுதப்படைகளைச் சேர்ந்த11 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இலங்கை விமானப்படையினருக்கும், சிறப்பு அதிரடிப்படையினருக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றது.

இலங்கை காவல்துறையைச் சேர்ந்த ஒருவருக்கும் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே பாரிய மோதலாக உருவெடுத்தது.

இந்த மோதலில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பல குடியிருப்புகளும், மூன்று முச்சக்கர வண்டிகளும் அடித்து நொருக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகளை நடத்த பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் தொடர புடையவர்கள் மீது இராணுவ மற்றும் குடியியல் சட்டங்களின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஆயுதப்படையினரால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக தாம் மன்னிப்புக் கோருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைப் படைகள்ளச் சேர்ந்த 45பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த மோதலில் சம்பந்தப்பட்ட களுத்துறை சிறப்பு அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையின் பணிப்பாளர் பற்றிக் அடெமா உடனடியாக கோணஹென பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பயிற்சிப் பாடசாலையின் கட்டளை அதிகாரி சந்திரசிறி ரணவக்க தெரிவித்தார்.

இலங்கைப் படைகளுக்குள் இது போன்ற மோதல்கள் நிகழ்வது அண்மைக்காலத்தில் இது இரண்டாவது தடவையாகும்.

கடந்த பெப்ரவரி மாத நடுப்பகுதியில் புத்தலவில் நடைபெற்ற கண்காட்சியின் போது சிறப்பு அதிரடிப் படையினரும் இலங்கை இராணுவக் கொமாண்டோக்களும் மோதிக் கொண்டதில் 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பரிஸ் இளைஞர் படுகொலை இலங்கைத் தமிழர் கைதானர்

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டின் பரிசின் புறநகர் பகுதியான லாகூர்நெவ்வில் அண்மையில் 26 வயதுடைய சங்கரதாஸ் தேவராசா என்ற இளைஞரை வெட்டிப்படு கொலை செய்த கும்பலின் முக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பரிசியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரான 20 வயதுடைய சந்தேகநபர் கடந்த புதன்கிழமை காலை நுவாசி லு கிறாண்ட் பகுதியில் இருக்கும் அவரது இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் சங்கரதாஸ் தேவராசா என்ற இளைஞரை கோடாரியால் கொத் தியதைப் பலர் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளனர். இவரைப் பொலிஸார் நீண்டகாலமாக தேடிவருவதாக சென் சென்டனி பொலிஸார் தெரிவித்துள்ளனர் என இந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் பல குற்றங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய ஏனைய குற்றவாளிகளும் கைது செய்யப்படுவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## றுகுணு பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் நுழைய தடை

(கொழும்பு)

றுகுணு பல்கலைக்கழகம் மாணவர்கள் நுழைவதற்கு தடைசெய்யப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர் குழுக்கள் இரண்டிற்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த மோதல் காரணமாக 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக றுகுணு பல்கலைக்கழக துணை உபவேந்தர் பேராசிரியர் காமினி சேனநாயக்க தெரிவித்தார்.

# தமிழ் - சிங்கள புதுவருடத்திற்குப் பின்னர் கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் கப்பல்சேவை எதிர்வரும் சிங்கள - தமிழ் புத்தாண்டுக்கு பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைக் கப்பல் கூட்டுத் தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோகரி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் சூதாடுவதற்கு அல்லது வேறு விளையாட்டுகளில் பங்கேற்பதற்கு பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் கப்பல்சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

புத்தகாயாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் பௌத்த யாத்திரிகர்களுக்கு இந்தப் பயணிகள் கப்பல்சேவை பெரிதும் உதவியாக இருக்கும்.

இந்தக் கப்பலில் வெளிப்புறமாக 186 அறைகளும், உட்புறமாக 134 அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சாதாரண வகுப்பில் பயணம் செய்யும் பயணிகள் ஒவ்வொருவரும் சராசரியாக 10 ஆயிரம் ரூபாவை இருவழிப் பயணக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

அவர்கள் ஒவ்வொருவரும் 100 கிலோ எடையுள்ள பொருட்களை எந்தக் கட்டணமுமின்றி கொண்டு செல்ல முடியும்.

இந்தக் கப்பல்சேவையை நடத்துவதற்கு வசதியாக கொழும்பு பழைய துறைமுக இறங்குதுறை தயார் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு சுங்க, குடிவரவு, குடியகல்வு, நிலையங்களும், அரச வங்கிகளின் கிளைகளும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் இறங்குதுறையில் இருந்து பயணிகளைத் துறைமுகத்துக்கு வெளியே அழைத்து வருவதற்கான சிறப்பு பேருந்து வசதிகளையும் சிறிலங்கா கப்பல் கூட்டுதாபனம் வழங்கவுள்ளது.

1044 பயணிகள் மற்றும் பொருட்கள், 200 வாகனங்களை ஒவ்வொரு பயணத்தின் போதும் ஏற்றிச் செல்வதற்கான உடன்பாட்டில் தூத்துக்குடியில் உள்ள பிளெமிங்கோ சிப்பிங் லைன்ஸ் நிறுவனத்துடன் இலங்கைக் கப்பல் கூட்டுத் தாபனம் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளது.

அத்துடன் சிறப்பு உணவகங்கள், சுங்கத் தீர்வையற்ற வணிக நிலையங்கள், சூதாட்ட விடுதிகள், வேறு விளையாட்டு வசதிகளும் இந்தக் கப்பலில் பயணிகளுக்காக செய்து கொடுக்கப்படவுள்ளன.

வாரத்தில் இரண்டு சேவைகளை நடத்தும் வகையில் இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்து இந்தக் கப்பல் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

மணிக்கு 16 கடல்மைல் வேகத்தில் பயணம் மேற்கொள்ளும் இந்தப் பயணிகள் கப்பல் 8 தொடக்கம் 10 மணிநேரத்தில் தனது பயணத்தை நிறைவு செய்யும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய மட்டத்தில் முதலிடம்



2010ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 08-03-2011 அன்று நடைபெற்றது. இதில், விருந்தினர்களுடன் வெற்றியீட்டியமாணவர்களைக் காணலாம். (54)

# சிறீகாமாட்சி அணி தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் ஒன்பதாவது ஆண்டாக நடாத்திவரும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் சிறீகாமாட்சி அணி காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

மானிப்பாய் பரீஸ் அணிக்கெதிரான போட்டியில் மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றே காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலில் ஆடிய பரீஸ் அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திலக் 28, சாத்வீகன் 25, கோபி 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சர்வா ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கிய ஆடிய சிறீகாமாட்சி அணி, 24.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சர்வா 31, மோகன் 19, அரவிந்தன் 22, றதீஸன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். இவ் வெற்றியின் மூலம் காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைச் சிறீகாமாட்சி அணி பெற்றுக்கொண்டது.




# புதுக்குடியிருப்பு உபகோட்டமட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(முல்லைத்தீவு)

அண்மையில் நடைபெற்ற புதுக்குடியிருப்பு உபகோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

**கிரிக்கெட்**

ஆண்கள் பிரிவு: முதலாமிடம் பாரதி வித்தியாலயம், இரண்டாமிடம் விசுவமடு ம.வி.

பெண்கள் பிரிவு: முதலாமிடம் பாரதி வித்தியாலயம், இரண்டாமிடம் விசுவமடு ம.வி.

**கரப்பந்து**

ஆண்கள் பிரிவு:

15 வயதுப் பிரிவில் முதலாமிடம் பாரதி வித்தியாலயம், இரண்டாமிடம் விசுவமடு ம.வி, 17 வயதுப் பிரிவில் முதலாமிடம் விசுவமடு ம.வி., இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம், 19 வயதுப் பிரிவில் முதலாமிடம் விசுவமடு ம.வி., இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம்.

பெண்கள் பிரிவு: 15 வயதுப் பிரிவில் முதலாமிடம் விசுவமடு ம.வி., இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம்.

**கால்பந்து**

ஆண்கள் பிரிவு: 17 வயதுப் பிரிவு முதலாமிடம் விசுவமடு ம.வி. இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம், 19 வயதுப் பிரிவில் முதலாமிடம் பாரதி வித்தியாலயம்.

பெண்கள் பிரிவு: 19 வயதுப் பிரிவில் முதலாமிடம் விசுவமடு ம.வி., இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம்.

**எல்லே**

ஆண்கள் பிரிவில் விசுவமடு ம.வியும், பெண்கள் பிரிவில் பாரதி வித்தியாலயமும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டன.

**வலைப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவில் முதலாமிடம் விசுவமடு ம.வி., இரண்டாமிடம் பாரதி வித்தியாலயம், 15 வயதுப் பிரிவில் பாரதி வித்தியாலயமும், 17 வயதுப் பிரிவில் விசுவமடு ம.வி.யும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டன. (17)

# அடுத்த உலகக் கிண்ணத்தில் அணிகளின் எண்ணிக்கை பத்து





(மும்பை)

அடுத்து வரும் உலகக் கிண்ணத் தொடரில் அணிகள் எண்ணிக்கை பத்தாகவே இருக்கும் என சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மொத்தம் 14 நாடுகள் பங்கேற்றன. சிறிய நாட்டு அணிகள் கலந்து கொண்டதால் ஆட்டத்தின் தரம் சரியில்லை என்றும், போட்டி நாட்கள் அதிகரிப்பதாகவும் சர்ச்சை எழுந்தது. இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் நடந்தது. தலைவர் சரத்பவார் தலைமையில் நிர்வாகிகள் கூடி ஆலோசனை நடத்தினார்கள். இதன்போது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் விபரம் வருமாறு:

இதில் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்தில் 2015ஆம் ஆண்டில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை 10 ஆகக் குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதாவது முழு உறுப்பினர் நாடுகள் மட்டும் கலந்து கொள்ளும். 2019ஆம் ஆண்டில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் 10 அணிகள் தகுதி அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். 20 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் 16 அணிகள் பங்கேற்பது குறித்து அக்டோபர் மாதத்தில் நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று ஐ.சி.சி. செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒபாமா வாழ்த்து



உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணிக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் டிமோதி ரோமெர் டெல்லியில் கூறுகையில், அமெரிக்க மக்கள் சார்பிலும், அதிபர் ஒபாமா சார்பில் 28 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை வென்று சாதனை படைத்த இந்திய அணிக்கும், தலைவர் டோனி மற்றும் டெண்டுல்கருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

# இங்கிலாந்து ஊடகங்கள் பாராட்டு




(லண்டன்)

டோனி சிறப்பான முறையில் செயற்பட்டு, கிண்ணத்தை வென்று ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்துள்ளார் என, இங்கிலாந்து ஊடகங்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.


உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி 1983இற்குப் பின், இரண்டாவது முறையாகக் கிண்ணத்தை வென்றது. இதற்கு இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

த கார்டியன் என்ற பத்திரிகையில், முரளிதரன் பந்தை முதலில் சற்று கவனித்துக் கொண்ட டோனி, அப்புறம் கூடுதல் பவருடன் போட்டுத்தாக்கினார். கடைசியில் கிண்ணத்தை வென்று சாதித்து, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும், மகிழ்ச்சியைக் கொண்டு வந்தார் என தெரிவித்துள்ளது.

த நியூஸ் ஆப் தி வேர்ல்டு என்ற பத்திரிகையில், இலங்கை அணித் தலைவர் சங்கக்கார, நாணயச் சுழற்சி போடும் போது ஏமாற்றும் வேலையில் இறங்கினார். ஆனால் கடைசியில் சிக்சர் அடித்து டோனி வெற்றிதேடித்தந்தார் எனத் தெரிவித்துள்ளது.


தி சண்டே டைம்ஸ் என்ற பத்திரிகையில், சேவாக், சச்சின் ஆட்டமிழந்த பின், இந்திய அணி தள்ளாடத் தொடங்கியது. ஆனால் நடுவரிசையில் கம்பீர், ஹோலி, டோனி, யுவராஜ்சிங் இணைந்து உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தி, கிண்ணத்தை வென்று கொடுத்தனர் எனத் தெரிவித்துள்ளது.

## மனமின்றிப் பிரிகிறார் கிறிஸ்டன்



இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த ஹரி கிறிஸ்டன், நேற்றைய தினம் மும்பையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டுடன் தனது பணியை நிறைவு செய்து நாட்டிற்குத் திரும்பினார்.

## அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் யூன் மாதம் இங்கிலாந்து சுற்றுலாவின் பின்னர் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கு ஏற்கனவே தான் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், தற்போதைக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் திட்டம் எதுவுமில்லையெனவும் அவர் தெரிவித்தார்.


# சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு?

(கொழும்பு)


இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார். இது தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:

உலகக் கிண்ண அணியில் என்னைத் தெரிவு செய்யாதது குறித்து நான் மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளேன். முக்கியமான ஆட்டங்களில் நான் விளையாடலாமென தேர்வாளர்கள் என்னிடம் தெரிவித்தனர். எனவே, நானும் மகிழ்வடைந்தேன். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. எனினும் இந்தத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக விளையாடியதையிட்டு நான் நிறைவடைகின்றேன். கிண்ணத்தைக் கைப்பற்றாதபோதிலும் இறுதிப் போட்டிவரை சென்று, அதில் இறுதி வரை போராடியமை அதன் திறமையை வெளிப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளவேண்டும்.

இங்கிலாந்திலுள்ள கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடவுள்ளேன். உடற்தகுதி இடம் கொடுக்கும் வரை நான் விளையாடுவேன். பயிற்சியாளராக செல்வதற்கான வாய்ப்புக்காகவும் காத்திருக்கிறேன். எந்த அணியாக இருந்தாலும் அந்த வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் முதன்மை அணியைக் கொண்டு வர முயற்சிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ள ஒபாமா



(வொஷிங்டன்)

அடுத்த வருடம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா மீண்டும் போட்டியிடவுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பராக் ஒபாமா அமோக வெற்றி பெற்றார். அமெரிக்காவின் முதல் கறுப்பின அதிபர் என்ற பெருமையையும் பெற்றார். அவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2012) முடிவடைகிறது.

இதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேடபாளராக ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார்.

இதைத் தொடர்ந்து அவர் தனது ஆதரவாளர்களிடையே பிரசாரத்தைத் தொடங்கினார். அதற்காக அவர் வீடியோ ஒன்றைத் தயாரித்துள்ளார். அதில் தனது ஆட்சிகாலத்தில் அமெரிக்காவில் நிகழ்த்திய சாதனைகளையும் தான் ஏன் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்றும் விளக்கி உள்ளார். மேலும் இமெயில் மூலமும் விளக்கமாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஒபாமாவுக்கு அடுத்த படியாக ஜோ பைடன் துணை ஜனாதிபதியாக உள்ளார். அவரும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அப்பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ளார்.

இதற்கிடையே, எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியில் ஒபாமாவுக்கு எதிராக சக்தி வாய்ந்த வேட்பாளர் போட்டியிடவுளளார். கடந்த தேர்தலில் ஒபாமாவுக்கு எதிராக சாரா போலின் போட்டியிட்டார். அவரையே இந்தத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தலாம் என அக்கட்சி ஆலோசித்து வருகிறது.

இவர் தவிர தொழிலதிபர் டொனால்ட் டிரம்ப், மிசிசிப்பி ஆளுநர் கலி பார்பர், முன்னாள் ஆளுநர்களான மைக் ஹகாபே, மிட் ரோமினி உள்ளிட்டோரின் பெயர்களும் பரிசீலனையில் உள்ளன.

# வேகமாக உருகும் பனிப்பாறைகள் அதிகரிக்கின்றது கடலின் நீர்மட்டம்



(லண்டன்)

உலகம் வெப்பமயமாகி விட்டதால் வழக்கத்தைவிட பனிப்பாறைகள் அதிக அளவில் உருகத் தொடங்கிவிட்டன. அவை கடந்த 350 ஆண்டுகளைவிடத் தற்போது கூடுதலாக உருகி வருகிறது. தென் அமெரிக்காவின் படகோனியாவில் உள்ள பனிப்பாறைகள் மிகப் பெரியவை.


அவற்றில் உள்ள 270 பனிப்பாறைகள் தற்போது உருகத் தொடங்கி உள்ளன. இதனால் அங்கு கடந்த 30 ஆண்டுகளில் ஐஸ்கட்டிகளின் அளவு மிகவும் குறைந்துள்ளது. இது படிப்படியாகக் குறைந்து பனிப்பாறைகள் இல்லாத நிலை உருவாகும்.

அதேபோன்று ஆல்ப்ஸ் மலையில் உள்ள பனிப் பாறையும் உருகி வருகிறது. இவ்வாறு உருகி வருவதால் பனிப்பாறைகள் இல்லாத நிலை உருவாகி, ஆறுகள் வற்றும் சூழ்நிலை ஏற்படும்.

அதேநேரத்தில் கடலில் நீர்மட்டம் உயர்ந்து பெரும்பாலான தீவுகள் மற்றும் கடலோர நகரங்கள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உருவாகும். இந்த ஆய்வை இங்கிலாந்தில் உள்ள ஆபெர்ட்வித் பல்கலைக்கழக நிபுணர்கள் மேற்கொண்டனர்.

இந்தப் பனிப்பாறைகள் வழக்கத்தை விட 100 மடங்கு அதிகமாக உருகுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஹெய்டி ஜனாதிபதித் தேர்தலில் பொப் பாடகர் வெற்றி பெற்றார்



(போர்ட்ஆப்பிரின்ஸ்)

ஹெய்டி ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டின் புகழ் பெற்ற பொப் பாடகர் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடான ஹெய்டி நாட்டிற்கான ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஆண்டு நவம்பரில் நடந்தது. இத் தேர்தலில் அந்நாட்டின் புகழ்பெற்ற பொப் பாடகர் மைக்கல்மார்டிலி (50) போட்டியிட்டார். இவரை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதியின் மனைவி மிர்லாண்டே மெனிகாட் (75) என்பவரும் போட்டியிட்டார். இந்நிலையில் தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதில் மைக்கல் மார்டிலி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் வரும் ஏப்ரல் 16 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார். ஹெய்டியில் கடந்த 2010 ஆம் ஆண்டு நிகழ்ந்த பயங்கரப் பூகம்பத்தினால் ஆயிரக்கணக்கானோர் பலியாயினர். மீட்புப்பணிகள் இன்னும் மந்த நிலையில் உள்ளதால் , அங்கு வாழும் மக்கள் மலேரியா, கொலரா போன்ற தொற்றுநோய்களால் அவதியுற்று வருகின்றனர்.

இப்பிரச்சினையினை தீர்க்கும் முயற்சியில் புதிய ஜனாதிபதிக்கு கடும் சவால் எதிர்நோககியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியாகத் தெரிவு தெரிவுசெய்யப்பட்ட மைக்கல் மார்டிலி ஹெய்டி நாட்டின் சுவீட் மிக்கி என்று அவரது ரசிகர்களால் அழைக்கப்படுகிறார்.

# ஜப்பான் அணு உலைக் கதிர் வீச்சால் பசுபிக் கடல் மாசடையும் அபாயம்



(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மாதம் 11 ஆம் திகதி பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டது. இதனால் புகுஷிமாவில் உள்ள அணு உலைகள் வெடித்தன. அதில் இருந்து கதிர்வீச்சு வெளியேறியது. அது பால், குடிநீர் மற்றும் உணவு பொருட்களில் பரவியது.


எனவே கதிர்வீச்சு பரவுவதைத தடுக்க குளிர்ந்த, சுத்தமான நல்ல தண்ணீரை வடித்துச் சிதறிய அணு உலைகள் மீது நிபுணர்கள் ஊற்றி வருகின்றனர். தற்போது அந்த நீர் பெருமளவில் பெருகி புகுஷிமா அணு உலையில் தேங்கிக் கிடக்கிறது.

அந்தத் தண்ணீரிலும் கதிர்வீச்சு பரவியுள்ளது. வழக்கத்தைவிட 10 ஆயிரம் மடங்கு அதிகமாக அதில் கதிர்வீச்சு உளளது. இருந்தும் அணுஉலையில் இருந்து அந்தத் தண்ணீரை வெளியேற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களாக தலா 4800 தொன் எடையுள்ள கதிர்வீச்சுப் பாதித்த தண்ணீர் புகுஷிமா அணுஉலை அருகே உள்ள பசிபிக் கடலின் ஆழமான பகுதியில் கொட்டப்பட்டது. 5ஆவது மற்றும் 6-ஆவது அணு உலையில் தேங்கிக் கிடகக்கும் 1500 தொன் தண்ணீரும் கடலில் கொட்டப்படவுள்ளது.

இந்தத் தகவலை டோக்கியோ மின்வாரிய நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கதிர்வீச்சுப் பாதித்த நீரைக் கொட்டியதால் பசிபிக் கடலில் மாசு ஏற்படும் அபாயம் உள்ளது. அதில் வாழும் மீன்கள் மற்றும் ஆழ்கடல் உயிரினங்களுக்கும் கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்படும்.

அதுதவிர கடலோரப் பகுதியில் வாழும் மக்களும் கதிர்வீச்சினால் பாதிக்கப்படுவர். இருநதும் வேறு வழியில்லை. எனவே அப்பகுதி மக்கள் இதைப் பொறுத்துக் கொண்டு தங்களை மன்னிக்க வேண்டும் என டோககியோ மின்வாரிய பொறியியலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




# ஐ.நா. விமானம் வீழ்ந்து நொருங்கியதில் அமைதிப் படைவீரர் உட்பட 32 பேர் பலி



(கின்ஷாசா)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் தொடர்ந்து கலவரம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, ஐ.நா.சபை அங்கு அமைதிப் படையை அனுப்பியுள்ளது. அதில் 19 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். இவர்கள் கலவரக்காரர்கள் மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து மக்களைக் காப்பாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஐ.நா.சபையின் அமைதிப் படை வீரர்கள், ஊழியர்கள் உட்பட 33 பேர் ஒரு விமானத்தில் கிசன்கனியில் இருந்து கின்ஷாசா நகருக்கு புறப்பட்டுச் சென்றனர். இந்த விமானம் கின்ஷாசா விமான நிலையத்தில் தரை இறங்கியது.

அப்போது விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து தரையில் மோதி தீப்பிடித்தது. இதனால் விமானம் வெடித்துச் சிதறியது. இச்சம்பவத்தில் விமானத்தில் பயணம் செய்த அமைதிப்படை வீரரகள் மற்றும் விமான ஊழியர்கள் உள்பட 32 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

ஒருவர் மட்டும் படுகாயத்துடன் உயிர் தப்பினார். அவர் அங்குளள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துக்கு மாறுபட்ட தட்பவெப்பநிலையும் மற்றும் அதிக அளவில் காற்று வீசியதும் தான் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்தத் தகவலை ஐ.நா. சபையின் அமைதிப்படை தலைமை அதிகாரி ஆலியன் வீராய் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, விமான விபத்தில் பலியான வீரர்களின் குடும்பத்துக்கு ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபை சார்பில் ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தூதர் சூசன்ரைசும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# கடாபி பதவி விலக வேண்டுமென அவரது மகன்மார் கோரிக்கை



(வொஷிங்டன்)

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிரான கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் கடாபி பதவி விலகலாம் என அவரது இரு மகன்மார் யோசனை தெரிவித்துள்ளதாக த டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடாபி பதவி விலகி, அவரது மகன் சயீப் இடைக்கால அரசு அமைப்பதற்கு சயீப் மற்றும் கடாபியின் மற்றொரு மகனான சாதீ யோசனை தெரிவித்துள்ளனர். எனினும் மற்ற இரு மகன்களான கமீஸ் மற்றும் முதுவாசிம் ஆகியோர் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கி வெற்றி பெற வேண்டும் என்று கூறுவதாகத் தெரிகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைகள் லிபிய படைகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில் கடாபியின் மகன்மார் இந்த யோசனையைத் தெரிவித்துள்ளனர்.

லிபியப் படைகளிடம் நவீன ஆயுதங்கள் இல்லாததாலும், அமெரிக்கா தலைமையிலான படைகளைத் தொடர்ந்து சமாளிக்க முடியாது என்ற அச்சத்தாலும் தான் கடாபியின் மகன்மார் இந்த யோசனையை முன் வைத்துள்ளதாக மேற்கத்திய நாடுகளின் உளவு நிறுவனங்களை மேற்கோள் காட்டி அல் ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

எனினும் லிபிய எதிர்க்கட்சிகள் கடாபியின் மகன்மாரின் மாற்று யோசனையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

இதனிடையே லிபியாவின் மேற்குப் பகுதியில் உள்ள எண்ணெய் நகரமான மிஸ்ரடாவை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து லிபிய படைகள் கைப்பற்றியுள்ளன. லிபியப் படைகள் அந்த நகரத்தை முற்றுகையிட்டு தரை வழியாகவும் வான் வழியாகவும் குண்டு மழை பொழிந்ததாகவும் இதை அடுத்து கடந்த 3 வாரங்களாக கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மிஸ்ரடா லிபியப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகவும் அல் ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

இந்தச் சண்டையில் காயம் அடைந்தவர்களுக்கு உதவ வந்த துருக்கியின் நிவாரண கப்பல்கள் மீதும் லிபியப் படைகள் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதாக அல் ஜசீரா தெரிவித்தது.

# தமிழகத் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஒரு இலட்சம் பொலிஸார் கடமையில்!



(கோவை)

தமிழகத் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஒரு இலட்சம் பொலிசாரும், கூடுதலாக 15 ஆயிரம் துணை நிலை இராணுவப் படையினரும் ஈடுபடவுள்ளனரென பொலிஸ் அத்தியட்சகர் போலோநாத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் மிக அமைதியான முறையில் தேர்தல் நடப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

மக்கள் அச்சமின்றி, சுதந்திரமான முறையில் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்றத் தேவையான, பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதி செய்யப் பட்டுள்ளன.

உள்ளூர் பொலிஸாருக்கு உதவியாக மத்திய பொலிஸ் படையினர், முன்னாள் இராணுவத்தினர், ஊர் காவல் படையினர், வனத்துறையினர், தேசிய மாணவர் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர். தேர்தலை முன்னிட்டு குறிப்பிட்ட நபர்களை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யும் திட்டம் ஏதுமில்லை.

அந்தந்த மாவட்டங்களில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப பொலிஸ் அதிகாரிகளே முடிவு செய்து நடவடிக்கை மேற்கொள்வர் எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ராஜபக்ஷ-காங்கிரஸ் வேட்பாளர் சுவரொட்டி ஒட்டப்பட்ட கார் பறிமுதலானது!

(ராமேஸ்வரம்)

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன், ராமநாதபுரம் காங்கிரஸ் வேட்பாளர் ஹசன் அலி இருப்பது போன்று, சுவரொட்டி ஒட்டப்பட்ட காரை, பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சிலர் ராமேஸ்வரம் பகுதியில் மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர் ஜவஹிருல்லாவை ஆதரித்து, பாம்பன் பகுதியில் பிரசாரம் செய்தனர். இவர்கள் சென்ற






காரில், காங்கிரஸ் வேட்பாளர் ஹசன் அலி ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் இருந்து கேடயம் வாங்குவது போன்ற படத்துடன், சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து வேட்பாளர் ஹசன் அலி, தன்னைப் பற்றி நாம் தமிழர கட்சியினர் அவதூறு பிரசாரம் செய்வதாக பொலிஸில் புகார் செய்தார். பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இண்டிகா காரை, பாம்பன் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

# இந்தியத் தலைநகர் புதுடில்லி உட்பட வடமாநிலங்களில் சிறிய பூமியதிர்வு!

(புதுடில்லி)

**புதுடில்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் நேற்று முன்தினம் மாலை பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் வீடுகள், கட்டடங்கள் சிறிதாகக் குலுங்கின.**

வட இந்தியாவில் நேற்று முன்தினம் மாலை 5.02 மணிக்கு திடீரென்று மிதமான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இந்திய நேபாள எல்லையை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்ச்சி தலைநகர் புதுடில்லி, உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத், ராம்பூர், மீரட், மொரதாபாத் ஆகிய இடங்களிலும், பஞ்சாப், அரியானா மாநிலங்கள், ஹனியன் பிரதேசமான சண்டிகார், ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் உள்ளிட்ட சில பகுதிகளிலும், உத்தரகாண்ட், காஷ்மீர், இமாசலபிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் உணரப்பட்டது.

ரிச்டர் அளவில் 5.7 புள்ளியாகப் பதிவான இந்த பூமி அதிர்ச்சி சில இடங்களில் 20 வினாடிகள் நீடித்தது. டில்லியில் இருந்து 363 கிலோ மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 4.3 கிலோ மீற்றர் ஆழத்தில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அமெரிக்க பூகோள ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டபோது உத்தரகாண்ட் மாநிலத்தில் டேராடூன், நைனிடால், அலமோரா, பாகேஷ்வர், பிதோராகார், உத்தம்சிங் நகர், சமோலி ஆகிய இடங்களில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் சிறிதாகக் குலுங்கின. சண்டிகாரிலும் வீடுகள், கட்டடங்கள் சிறிதாக அதிர்ந்தன. இதனால் உள்ளே இருந்தவர்கள் பயத்தில் வெளியே ஓடி வந்தனர். இந்தப் பூமி அதிர்ச்சியினால் உயிர்ச் சேதமோ அல்லது பொருட் சேதமோ ஏற்பட்டதாக உடனடியாகத் தகவல் எதுவும் இல்லை என்று டில்லியில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் புலந்த்சாகர் மாவட்டத்தில் நரோரா அணுமின் நிலையம் உள்ளது. பூமி அதிர்ச்சி மையம் கொண்டிருந்த இடத்தில் இருந்து சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவில் இந்த அணுமின் நிலையம் உள்ளது.

பூமி அதிர்ச்சியினால் நரோரா அணுமின் நிலையத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றும், அணு உலைகள் பாதுகாப்பாக இருப்பதாகவும் அதன் தலைமை நிர்வாக அதிகாரி என். நாகைச் தெரிவித்தார்.

## விமானப் பயணிகள் காப்பாற்றப்பட்டனர்

(சென்னை)

திருவனந்தபுரம் விமான நிலையத்தில் ஏற்படவிருந்த பெரும் விமான அனர்த்தம் விமானியின் சாதுரியத்தால் தடுத்து நிறுத்தப்பட்டதனால் விமானத்திலிருந்த பயணிகள் காப்பாற்றப்பட்டனர்.

திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு ஏர் இந்தியா நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று புறப்படத் தயாராக இருந்தது. அதில் பயணிகள், சிப்பந்திகள் உட்பட மொத்தம் 103 பேர் இருந்தனர். ஓடுதள பாதையில் இருந்து பறக்கத் தயாரான போது, பறவை ஒன்று அந்த விமானத்தில் மோதியது.

இதில் அந்த விமானத்தின் இடது பக்க என்ஜின் பழுதடைந்தது. இதையடுத்து, விமான நிலையத்திலேயே அந்த விமானம் அவசரமாக நிறுத்தப்பட்டது. இதனால் பெரும் அசம்பாவிதம் தடுக்கப்பட்டது. அந்த விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் வேறு விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டனர்.



வாக்காளர்களுக்கு வழங்கவென திருச்சி பொன்நகரில் தனியார் பேருந்தில் கடத்தப்பட்ட ரூபா ஐந்து கோடியே 11 இலட்சம் பணத்துடன் மாவட்ட ஆர்.டி.ஓ சங்கீதாவைக் காணலாம்.

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சாய்பாபாவிற்கு செயற்கைச் சுவாசம் அளிப்பு

(அனந்தப்பூர்)


நுரையீரல் மற்றும் நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சத்ய சாய்பாபாவுக்கு தொடர்ந்து செயற்கை சுவாசக் கருவி மூலம் சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாக அவருக்கு சிகிச்சை அளித்துவரும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சாய்பாபாவுக்கு நேற்று முன்தினம் இருந்த அதே நிலைமையே நீடிக்கிறது என உயர்கல்வி மருத்துவத்துக்கான சத்யசாய் நிறுவனத்தின் இயக்குநர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது சுயநினைவு குறிப்பிடத்தக்க அளவு முன்னேறி வருகிறது. உயிர்நாடி அமைப்புகள் சீரான நிலையில் உள்ளன. இருப்பினும் செயற்கை சுவாசக் கருவி மூலம் அவருக்கு சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சாய்பாபாவை தரிசிக்க தங்களை அனுமதிக்காத மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர அதிகாரிகளை பாபா ஆதரவாளர்கள் தாக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து புட்டபர்த்தி நகரில் 144 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு கூடுதல் பொலிஸார



அப்பகுதிக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, பாபாவின் உடல் நிலை குணமடைய வேண்டுமென உலகெங்கிலுமுள்ள அவரது பக்கர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஏற்றிவிட்ட ஏணியையே எட்டி உதைக்கும் வடிவேல்

## இயக்குநர் உதயகுமார்

(நாகர்கோவில்)

ஏற்றிவிட்ட ஏணியையே எட்டி உதைக்கிறார் வடிவேலு என இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் தெரிவித்தார்.

அ.தி.மு.க.விற்காகப் பிரசாரம் செய்யும் அவர், பிரசாரக் கூட்டமொன்றில் மேலும் தெரிவித்ததாவது:


விஜயகாந்த் ஒரு நல்ல மனிதர். எதையும் வெளிப்படையாகப் பேசுவார். அவரை வைத்து நான் சின்னக்கவுண்டர் படம் இயக்கும்போது நடிக்க வாய்ப்புக் கேட்டு வந்தவர்தான் வடிவேலு. அந்தப் படத்தில் விஜயகாந்துக்குக் குடை பிடிப்பவராக வடிவேலு நடித்திருப்பார். விஜயகாந்திடம், பாவம் உங்கள் ஊர்ப் பையன்தான் அண்ணே! என்று, நான்தான் அறிமுகம் செய்து வைத்தேன்.

விஜயகாந்த் அவரைத் தட்டிக்கொடுத்து வளர்த்து விட்டார். ஆனால் ஏற்றிவிட்ட ஏணியை வடிவேலு எட்டி உதைத்துள்ளார்.

தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பேசும் அவர் வேட்பாளரை மதிப்பதே கிடையாது. திரை உலகம் இன்று ஒரே குடும்பத்தை நம்பி உள்ளது. இவர்களுக்கு ஜெயலலிதா மட்டும்தான் விடுதலை வாங்கித்தர முடியும் எனத் தெரிவித்தார்.



# மீண்டும் யுத்தம் ஏற்பட வேண்டுமென சில சக்திகள் முயற்சி செய்கின்றன



கேள்வி :- யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணி களும் அதில் இராணுவத்தினரின் பங்களிப்பும் எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது?

பதில்:- யாழ். குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத் திட்டமானது யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட கையோடு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்தை விடவும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களே பாரிய அழிவுகளைச் சந்தித்தன. இருப்பினும் இந்த யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்துக்கான அபிவிருத்திகள் எதுவும் நடைபெறாது முடக்கப்பட்டன என்பதே உண்மையாகும். அவ்வாறு முடக்கப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அபிவிருத்திக்கு முக்கியமானது கல்வியே. அந்தக் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள் காணப்படும் பிரதேசங்களில் யாழ்ப்பாணம் முதலிடம் வகிக்கும் அதேவேளை, மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகளிலும் யாழ்ப்பாணம் முக்கிய இடம் பிடித்துள்ளது. கொழும்பு மற்றும் தம்புள்ளை சந்தைகளில் மரக்கறிகளின் விலைகளின் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுசெல்லப்படும் மரக்கறிகளே காரணம் என்பது மறுப்பதற்கில்லை.

தற்போது ஒருநாளைக்கு சுமார் 20-25 மரக்கறி லொறிகள் யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கை நோக்கிப் பயணிக்கின்றன. கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு மரக்கறி லொறிகள் மாத்திரமே பயணித்தமை குறிப்பிடத்தக்கது. மீன்பிடித்துறையும் அவ்வாறே. அந்தளவுக்கு யாழ்ப்பாணம் பொருளாதார முறைமையிலும் அபிவிருத்தியிலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

கேள்வி :- கண்ணிவெடிகள் யாவும் அகற்றப்பட்டு இயல்பு நிலைக்கு யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளதான இராணுவ தளபதியின் கூற்றின் உண்மைத் தன்மை என்ன?

பதில் :- அவரது கூற்று முற்றிலும் உண்மையானது. யாழ்.குடா நாட்டில் பொதுமக்கள் தங்கியுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. கொழும்புத்துறை, அரியாலை, தனங்களப்பு போன்ற பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளும் அண்மைக் காலங்களிலேயே அகற்றப்பட்டன.

இந்நிலையில், யாழ். நகரம் மற்றும் அதனை அண்மித்த பொதுமக்கள் செறிவாக வாழும் பிரதேசங்கள் அனைத்தும் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அந்தவகையில், யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் 99 வீதமானவை பூர்த்தியடைந்துள்ளன எனக் கூறலாம். எஞ்சியுள்ள ஒரு வீதம் முகமாலை பிரதேசத்தையே உள்ளடக்குகின்றது. அங்கு தற்போது கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு அதிகாரிகளுடன் இணைந்து வெளிநாட்டு அமைப்புக்கள் சிலவும் ஈடுபட்டு வருகின்றன. இராணுவத்தின் சார்பில் சுமார் 300 அதிகாரிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் கண்ணிவெடி அகற்றலுக்காக கொண்டுவரப்பட்ட இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு அமைப்பினரை விடவும் இராணுவத்தினரே இந்த நடவடிக்கையில் முற்றிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பங்களிப்பு இதில் முக்கிய இடம் வகிக்கின்றது.

கேள்வி :- யாழ். பிரதேசத்தில் பொதுமக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எந்தளவுக்கு பூர்த்தியடைந்துள்ளன?

பதில் :- குடாநாட்டில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியை எட்டியுள்ளன. இன்னும் 333 குடும்பங்களைச் சேர்ந்த 1,506 பேர் மாத்திரமே மீள்குடியேற்றப்படவுள்ளனர். அவர்களும் சுமார் ஒன்றரை மாதங்களுக்குள் மீள்குடியேற்றப்பட்டு விடுவர். அதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் இல்லை.

**"நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படவேண்டும் என்றும் யுத்தத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சிலரும் சிற்சில இடங்களில் உள்ளனர். விசேடமாக புலம் பெயர் தமிழர்கள் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியனவே இவ்வாறான எதிர்ப்பார்ப்புக்களுடன் செயற்பட்டு வருகின்றன" என்று யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.**

**இணையத்தளமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். செவ்வியின் முழு விபரம் பின்வருமாறு:-**

கேள்வி :- யாழ். மக்களின் வாழ்வாதார நிலைமையில் ஏதேனும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?

பதில் :- குடாநாட்டைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடி மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரத்திலேயே தங்கியுள்ளனர். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருந்த நிலையில், இம்மக்கள் தங்களது துறையினை மேலும் வளர்த்துக் கொண்டு செல்வதுடன் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பினை நல்கி வருகின்றனர்.

மீன்பிடிதுறை என்று நோக்கும் போது, இந்து சமுத்திரத்தில் எமது நாட்டுக்குரிய பகுதி முழுவதும் எமது மீனவர்களுக்கே சொந்தம். இந்திய மீனவர்களின் பிரச்சினை இல்லையென்றால் முழுச் சமுத்திரத்திலும் எமது மீனவர்கள் மீன்பிடிக்க முடியும். தவிர மீனவர்களுக்குத் தேவையான ஏனைய உதவிகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது. பாதுகாப்பு தரப்பினரும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு தயாராகவே உள்ளனர்.

இதேவேளை, பொதுமக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றன அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக யாழ். மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கேள்வி :- யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு கெடுபிடி காணப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கான உங்களது பதில் என்ன?

பதில் :- இராணுவத்தினரை வீதிகளில் நிறுத்தி வைக்க வேண்டும் என்ற தேவை எமக்கு இல்லை. அதற்கு நாம் விரும்பவுமில்லை. காரணம் இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. அதனாலேயே கடந்த வருடம் ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதக் காலங்களில் வீதிகளில் பாதுகாப்புக் கடமைகளுக்கென நியமிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை அகற்றினோம்.

இருப்பினும் அடுத்த நவம்பர் - டிசெம்பர் மாதக் காலங்களில் குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிக்கத் தொடங்கின. கொலை, கொள்ளை, நகைகளைப் பறித்துச் செல்லல், பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்துதல் என பலவாறான குற்றச்செயல்கள் இடம் பெறத் தொடங்கின. அதனால் சில பிரதேசங்களில் மீண்டும் இராணுவத்தினரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

கேள்வி :- இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் யார்?

பதில் :- யுத்தத்தில் தோல்விகண்ட சில அரசியல்வாதிகளின் தலைமையிலேயே இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெற்றன. இவர்களில் ஒருவர் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்கு சாட்சிகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் உரிய விசாரணைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். வெகுவிரைவில் அவரை சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை, மேற்படி அரசியல்வாதிகளே யாழ்.மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், யாழில் தொடரும் இராணுவ பாதுகாப்பு மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் இவ்வாறான அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதால் மக்களிடையே மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் பொய்யான வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இதேவேளை, ஒரு சமூகத்தில் ஐந்தாறு பேராவது சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களில் சிலரே மேற்படி கொள்ளை மற்றும் நகைத் திருட்டு போன்ற சில குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு குற்றச்செயல்கள் இடம்பெற்ற போதும் கூட பொதுமக்கள் - பொலிஸாரிடம் முறைப்பாடுகளைச் செய்யவில்லை. இராணுவத்தினரே தமக்கு வேண்டும், அவர்களே எமது பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுப்பார்கள் என மக்கள் வேண்டினர்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற குற்றச் செயல்களை அடுத்து மீண்டும் இராணுவத்தினரைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட வைக்குமாறும் இரவு 10 மணிக்கு பின்னர் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துமாறும் யாழ்.மக்களும் அவர்களின் பிரதிநிதிகளுமே கோரினர். அவர்களின் கோரிக்கைகளுக்கமைவாகவே இராணுவத்தினர் மீண்டும் வீதிகளில் நிறுத்தப்பட்டனர்.

கேள்வி :- உங்களது இந்த பாதுகாப்பு நடவடிக்கையை அடுத்து குற்றச் செயல்களின் எண்ணிக்கைகள் குறைவடைந்துள்ளதா?

பதில் :- ஆம்... நிச்சயமாக. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவந்த குற்றச் செயல்களின் எண்ணிக்கை தற்போது பூச்சியமாக்கப்பட்டுள்ளது. இங்கு இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் பெருமளவிலானோர் இராணுவத்தினராலேயே கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சில குற்றச் செயல்கள் இடம்பெற்று இரு மணித்தியாலங்களுக்குள் கூட சந்தேக நபர்கள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டும் உள்ளனர். இவ்வாறான துரித நட வடிக்கைகள் காரணமாகவே பொது மக்கள் இராணுவத்தினர் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கேள்வி :- யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதோடு யாழ்ப்பாணத்தில் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரிக்கக் காரணம் யாது?

பதில் :- யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் நடைபெறக்கூடிய சூழ்நிலை இல்லை. பொய் வதந்திகளே இவை. புலம்பெயர் தமிழர்களே இவ்வாறான கதைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் யாழ்.மக்களின் பிரச்சினைகளுடனேயே வாழ்பவர்கள். யாழ். மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதன் மூலம் மட்டுமே அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

உருத்திரகுமாரன், நெடியவன் போன்றவர்கள் யாழ். மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே நிதி சேகரிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். யாழ். மக்களின் பிரச்சினை என்று கதைக்கும் அளவுக்கு அவர்களுக்கு இலாபம். அதனாலேயே யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவற்றுக்கு இராணுவத்தினரே காரணம் என்றும் அவர்கள் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

"யாழ்ப்பாணத்தில் ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டிருங் கள். அவ்வாறு செய்தால் ஆயிரக்கணக்கான டொலர்களை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்" என்றெல்லாம் ஒரு சிலருக்கு தகவல்கள் பரிமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டறிந்து விசாரணைகளை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

இதுவே யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை. இவ்வாறானதொரு நிலையிலேயே மக்களை நாம் பாதுகாத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றோம். உண்மையில் இங்கு பாதாள உலகக்கோஷ்டி நட வடிக்கைகள் இடம்பெறுவதில்லை. அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதுமில்லை.

கேள்வி :- யாழ். மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான தொடர்பு எத்தகையது?

பதில் :- இங்குள்ள மக்கள் இராணுவத்தினருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர்கள். இருதரப்பினருக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. கொழும்பிலுள்ள மக்களை விடவும் யாழ். மக்கள் மிகவும் சந்தோஷமாகவே வாழ்கின்றனர். கொழும்பிலுள்ள மக்களை விடவும் இங்குள்ள மக்களே மிகவும் சுதந்திரமாக நடமாடுகின்றனர். கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது இதுவொரு பாரிய மாற்றமாகும். அதையே மக்களும் நாமும் எதிர்பார்க்கின்றோம்.

இருப்பினும், சுரேஷ் பிரேமசந்திரன், மாவை சேனாதிராஜா போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவத்தினர் மீதே தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்துக்கு எதற்கு பெருமளவில் இராணுவத்தினர்? எனக் கேள்வி எழுப்புகின்றனர். ஏன் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவதில்லை? என்று கேட்கின்றனர். இருப்பினும் இங்குள்ள மக்கள் பொலிஸாரை விடவும் இராணுவத்தினர் மீதே நம்பிக்கை கொண்டுள்ளனர். இது பொலிஸார் மீதான தவறு அல்ல. காரணம் கடந்த சில வருவடங்களாகவே இராணுவத்தினருடனேயே பொது மக்களின் தொடர்புகள் காணப்பட்டன. அதனால் இரு தரப்பினர்களுக்கும் இடையில் நெருங்கிய உறவு ஏற்பட்டுள்ளது. அதனாலேயே எதற்கெடுத்தாலும் அவர்கள் இராணுவத்தினரிடம் ஓடி வருகின்றனர். வீட்டில் கணவர் - மனைவிக்கிடையில் ஏற்படும் பிரச்சினை களுக்கு தீர்வு பெற்றுக்கொள்ளக்கூட இராணுவமுகா மை நோக்கி ஓடுகின்ற நிலை மையே இங்குள்ளது.

(தொடரும்)

# சம்பள முற்பணம் எப்போது கிடைக்கும்?
# வெள்ளம் பாதித்த ஊழியரின் ஏக்கம்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட மூன்று மாதச் சம்பள முற்பணம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என கிழக்கு மாகாண ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், ஏனைய அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள முற்பணம் உரிய முறையில் கிடைத்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் தமது வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு மகாண ஆசிரியர்களின் இந்தப் பிரச்சினை தொடர்பில் மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவிடம் வினவியபோது இந்த முற்பணத்தை வழங்குவதற்கு பல மில்லியன் ரூபா தேவைப்படுவதாக கூறினார்.

மாகாண சபை ஊடாக இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் திறைசேரியிடம் இருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரை காத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். ஆசிரியர்களுக்கான இந்த சம்பள முற்பணத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான அறிக்கையை திறைசேரியிடம் அனுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திறைசேரியில் இருந்து நிதி கிடைத்தால் மாத்திரமே பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான மூன்று மாதச் சம்பள முற்பணத்தை வழங்க முடியும் என கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தோல்வியைக் கண்டு மாரடைப்பு ஏற்பட்டு ஒருவர் மரணம்

(கொழும்பு)

இலங்கை அணி உலக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து, மாரடைப்பால் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் ஹங்குராகொட நகரில் இடம் பெற்றுள்ளது.

ஹங்குராகொட நகரில் தனது மனைவியுடன் விடுமுறை நாளைக் கழித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அதிர்சி காரணமாக மரணமடைந்துள்ளார்

32 வயதுடைய கீர்த்தி குணதிலக என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இந்திய அணியின் சேவாக் மற்றும் சச்சின் ஆகியோர் முன்னதாகவே ஆட்டமிழந்த போதும், தலைவர் தோனி அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றதாகக் கீர்த்தி குணதிலகவிற்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பலனளிக்காமல் மரணமாகியுள்ளார். இதேநேரம் உலகக் கிண்ண இறுதிப் போட்டி இடம்பெற்ற நாளன்று மாத்திரம் ஏற்பட்ட விபத்துக்களால் சுமார் 400 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மண்டைதீவுக்கு பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்திற்கு புதிய பேருந்து ஒன்று நேற்றுச் செவ்வாய்கிழமை காலை இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.பிராந்தியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட பேருந்தானது அடிக்கடி பழுதடைந்த காரணத்தினால் புதிய பேருந்து வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். பிராந்தியம் அறிவித்துள்ளது

இப்பகுதி மக்கள் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் நோக்கில் இதுவரை யாழ். மண்டைதீவுக்கென ஐந்து பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துச் சபையின் யாழ் பிராந

# ஹொங்கொங்கில் அடிதடி இலங்கைப் பயணியின் கைவரிசை

(ஹொங்கொங்)

ஹொங்கொங் விமான நிலையத்தில் இலங்கையிலிருந்து வந்த பயணியொருவருடன் ஏற்பட்ட மோதலினால் ஹொங்கொங் குடிவரவு அதிகாரிகள் ஐவர் காயமடைந்தனர்.

குடிவரவு கருமபீடத்தில் பயண ஆவணமொன்று தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதமே இம்மோதலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பயணியை அமைதிப்படுத்துவதற்கு முயன்ற போது குடிவரவு அதிகாரிகள் ஐவர் காயமடைந்துள்ளனர். இதன்போது அப்பயணியும் காயமடைந்துள்ளார். இவர்கள் 6 பேரும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக 41 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக ஹொங்கொங் பொலிஸார் தெரிவித்தனர்.

# சூழல் பாதுகாப்பு நடவடிக்கை துரிதம்

யாழ். நகரப் பகுதிகளில் பொலித்தீன் பைகளை கண்ட இடங்களில் வீச வேண்டாமென்று பொதுமக்களிடம், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகக் குவிந்து காணப்படும் பொலித்தீன் பைகள் போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே, வர்த்தக நிலையங்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் பொலித்தீன் மற்றும் கழிவுப் பொருட்களைப் போடுமாறும், இவ்வாறு போடத் தவறும் வர்த்தக நிலைய உரிமையாளர் மீது சுகாதாரத்திற்கு பங்கம் விளைவித்தல் என்ற சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் யாழ். மாநகரசபை முதல்வர் குறிப்பிட்டார்.

# புதிய வரவு

(கொழும்பு)

பயணிகள் பஸ் சேவையை மேலும் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நேற்று முதல் நூறு பஸ் வண்டிகளை இலங்கை போக்குவரத்துச் சபை சேவையில் ஈடுபடுத்தியது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இப்பஸ் வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான வைபவம் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தலைமையில் நடைபெற்றுள்ளது.

# கட்டுப்பாட்டை மீறியதால்; வந்த வீதி விபத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை மீறி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தி னுள் புகுந்துள்ளதுடன், ஓட்டுநரும் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சாரதி மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகவும், அதிக வேகத்தில் ஓட்டியதால் அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் தெரிகிறது (110)

## யாழ்.மாநகரசபை....

உறுப்பினர்களுக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் அனல் பறக்கும் விவாதம் ஆரம்பமாகியது.

ஆரம்பத்தில் மாநகர சபை நடவடிக்கைகள் தொடர்பாக மாநகர முதல்வரால் விடுக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக ஆரம்பித்த விவாதம் கூச்சல் குழப்பம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு பின் 12.30 மணிக்கு மீள ஆரம்பமானது.

கூட்ட ஆரம்பத்தில் மாநகர சபை உறுப்பினரும், சுகாதாரக் குழுவின் தலைவருமான மனுவல் மங்களநேசன் அவர்களால் கடந்த ஓராண்டு காலத்தில் முதல்வர் ஆற்றிய சேவைகளை பாராட்டும் முகமாக, முதல்வர் மீதான நம்பிக்கைப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

இப்பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான பரஞ்சோதி கனகரத்தினம் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பில் நம்பிக்கைப் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநகர சபையின் ஆளுந்தரப்பினரால் கொண்டுவரப்பட்ட அனைத்து பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்தும் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்த யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள் பிரரேணைகள் அனைத்தும் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

## உள்ளூராட்சி....

சர்வாதி காரத்தனமாக நிறைவேற்ற முயன்றதன் காரணமாக எதிர்க்கட்சிகள் நேற்று வெளிநடப்புச் செய்துள்ளன.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது உள்ளூராட்சி மன்றங்கள் திருத்தச் சட்டத்திற்கான வாக்கெடுப்பு நடாத்தப்படவிருந்தது. ஆயினும் அரசாங்கம் அதில் புதிதாக சேர்த்துக்கொண்ட விடயங்களை காலம் தாழ்த்தியே சபையில் சமர்ப்பித்தது.

அத்துடன், சட்டமூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

அதனைச்சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி வாக்கெடுப்பை இன்னொரு நாளில் வைத்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தது. நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மாகநாட்டி லும் அதனையே வலியுறுத்தியது.

ஆயினும், அரசாங்கம் விடாப்பிடியாக சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதில் முனைப்புக்காட்டியதன் காரணமாக எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ஐ.தே.க. , தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. கட்சிகள் வெளிநடப்புச் செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல் அமைப்பில்.....

அவர்களுக்கு சம உரிமை கிடைத்திட, சட்டத் திருத்தங்களைச் செய்யுமாறு இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றோம் இலங்கைத் தமிழர்களின் நிலையில் கடந்த ஓராண்டுச் காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது அவர்களின் மறுவாழ்விற்காக ஏராளமான நிதியுதவியை மத்திய அரசு செய்துள்ளது அவர்கள் வாழ்வு மேம்பட மேலும் உதவிகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


இப்பொழுது புனர்வாழ்வுக்காக ஏராளமான பணத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். அதுபோலவே 50 ஆயிரம் வீடுகள் புதிதாக கட்டுவது மட்டுமன்றி இலங்கையின் அரசியல் அமைப்பு விதிகளை மாற்றி தமிழர்கள் எல்லா உரிமைகளும் பெற்று தன்மானத் தோடும் பெருமையோடும், பெருமிதத்தோடும் வாழ்வதற்குரிய மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கில் அதிகாரப்......

மக்களுக்கு இருக்க வேண் டும் என ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கூறியுள்ளார். மேற்படி திட்டமானது சட்டத்திற்கு முரணானதாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத் திட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ள பிரதேசங்கள் ஐ.தே.க. ஆதிக்கம் செலுத்திவரும் பிரதேசங்கள் எனவும், இது எதிர்க்கட் சியை. ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் சூழ்ச்சியாகும் எனவும் அவர் கூறினார்.

வட்க்கு,கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துகிறது. அதேவேளை, தெற்கிலுள்ள மக்களின் உரிமைகளை நிராகரிக்கிறது எனவும் அத்தநாயக்க கூறியுள்ளார்.





## ஆசியாவில் பொலிஸ்....

பிரதானிகளின் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரஸ்தாப பிரேரணையை முன்வைத்துள்ளார்.

பயங்கரவாதம், போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோ தமாக ஆட்களைக் கடத்தல் போன்ற செயற்பாடுகளை முறியடிப்பதற்கு சார்க் வலய நாடுகளின் பொலிஸ் அமைப்புகள் ஒரு வலையமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு அதற்கு சார்க் போல் என்று பெயரிடப்பட வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரஸ்தாப முக்கிய விடயங்கள் முறியடிக்கப்படும் பட்சத்தில் இந்நாடுகளில் வாழும் மக்கள் அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் மற்றும் சமூக உணர்வு கொண்டவர்களாகவும் மாறுவார்கள் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# குடிசன மதிப்பீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் ஜனாதிபதி மஹிந்த கோரிக்கை



(கொழும்பு)

30 வருடங்களின் பின்னர் நாடளாவிய ரீதியாக நடத்தப்படும் குடிசன மதிப்பீட்டுக்காக ஆதரவு வழங்குவது பொதுமக்களின் கடமை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் கொழும்பு - கோட்டையில் உள்ள ஜனாதிபதி வாசஸ்தலத்தை பட்டியலிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

இந்த முறை குடிசன மதிப்பீடு 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 16 கிராம சேவையாளர் பிரிவுகளை வரைபடமாக்கும் நடவடிக்கை தற்போது நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் இரண்டாம் கட்டமான குடியிருப்புகளை பட்டியலிடும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதனிடையே, 3 ஆயிரம் குடும்பங்களுக்கான தங்கபூமி காணியுறுதிகளை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய ஜனாதிபதி, அனைத்து வீட்டுத் தோட்டங்களையும் வருமானத்தைப் பெறும் விதத்தில் மாற்றுவது அரசாங்கத்தின் நோக்கம் என குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொருவரும் தமக்குரிய காணிகளை உரிய முறையில் பயன்படுத்துகின்றார்களா என அவரவரே கேள்வியெழுப்பிக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளர்.

# சேலை அலங்காரம் யாழில் புது முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

(கொழும்பு)

மணப் பெண்களுக்குரியதும், சாதாரண சாறிகளுக்குமான சித்திர வேலைப்பாடுகளைக் கொண்ட சாறிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சரை நுகேகொட இஷாரா பஷன் காமன்ஸ் தனி யார் நிறுவனத்தின் உரிமையா ளர் இஷாரா மற்றும் பணிப்பாளர் ஹஸ்மி யூசுப் உள்ளிட்டோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது யாழ்ப்பாணத் தில் திருமணச் சாறிகள் மற்றும் சாதாரண சாறிகளில் சித்திர வேலைப்பாடுகளைச் செய்வது தொடர்பிலான பயிற்சிகளை வழங்கி, அதன் மூலம் அங்குள்ள பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளுக்கு வழி ஏற்படுத்தப்படவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்தினூடாக, யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாக 25 பெண்களுக்கு குறிப்பிட்ட பயிற்சி நெறியில் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், சித்திரை வருடப் பிறப்பிற்குப் பின்னர் இடம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்குவது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

நேற்றைய இந்தச் சந்திப்பில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர் விஜயக்கோன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தமிழீழக் கோரிக்கை......

இடம்பெற்ற 'எழுச்சி' நிகழ்வில் கலந்துகொண்டு நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொலைபேசி ஊடாக பெண் நேயர் ஒருவர் மேற்படி நிகழ்ச்சியுடன் இணைந்து கொண்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் இருந்த காலத்தில் தனிநாடு தான் ஒரே தீர்வு என்று அடித்துக் கூறியது. இப்போது புலிகள் இல்லாதபோது குத்துக்கரணம் போட்டுக் கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு அல்லது சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வு என்று கூறுகிறீர்களே, உங்களின் உண்மையான நிலைதான் என்ன? என்று மேற்படி நேயர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி எழுச்சி நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் சமகால அரசியல் நிலைமை குறித்து ஆராய்ந்ததுடன், பல்வேறு நேயர்களின் தொலைபேசி ஊடான கேள்விகளுக்கும் விடையளித்தனர்.

இந்நிகழ்வுக்கு தென்பகுதியில் பெரும் வரவேற்பு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'தமிழ் அலைகள் - 3' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழாவும், தமிழ் அலைகள் - 3 நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை 9 மணிக்கு செல்வன் ஜெ.வனுஜன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரனும், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் கௌரி முகுந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (மி)

## உள்ளூர் விமான சேவை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து நுவரெலியா செல்வதற்கான டெக்ஸி விமானம் ஒன்றை இலங்கை விமானசேவை நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

15 ஆசனங்களைக் கொண்ட இந்த விமானத்தில் நுவரெலியாவை அரை மணித்தியாலத்தில் சென்றடைய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பூநகரியில் பெண் மரணம்; சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பூநகரி - பள்ளிக்குடா பகுதியில் பெண் ஒருவர் நேற்று கத்திவெட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

பூநகரி - பள்ளிக்குடா பகுதியில் வசிக்கும் யோகராசா சசிகலா (வயது - 40) என்ற பெண்ணை அவருடைய மருமகள் கத்தியால் வெட்டியதாகவும், பெரும் காயங்களுக்குட்பட்ட இப்பெண் மரணமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிபதி மா.கணேசராசா விசாரணைகளை மேற்கொண்டார்.

மேற்படி சந்தேகநபரை பூநகரி பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மி,11)

# தொடரும் விளக்கமறியல்

(கொழும்பு)

பல்வேறு தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக கூறி கைது செய்யப்பட்ட புலி சந்தேக நபர்கள் 82 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தீவிரவாத தடுப்புப் பிரிவு மற்றும் இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்களை, சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் அனைத்தையும் நீதிபதியிடம் கையளித்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

நீதிபதியின் உத்தரவின் பின்னரே சந்தேக நபர்களிடம் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர். இதையடுத்து, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை சந்தேக நபர்களை தடுத்து வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## கட்டட ஒப்பந்தத்தில்......

இதில் ஊழல், மோசடிகள் எதுவும் நிகழ்ந்திருக்கவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் அவற்றை நிரூபணம் செய்யட்டும் என யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்.மாநகரசபை எதிர்க்கட்சியினரையும், இது குறித்துச் செய்தி வெளியிட்டு வரும் உதயன் பத்திரிகை நிறுவனத்தினரையும் கேட்டுக் கொண்டார்.

இவ்விடயம் குறித்து யாழ்.மாநகர முதல்வர். தமது அலுவலகத்தில் நேற்றுக் கூட்டிய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்.மாநகர உதவி மேயர் துரைராஜா இளங்கோ (றீகன்), யாழ்.மாநகர சுகாதாரக் குழுவின் தலைவர் மனுவல் மங்களநேசன் மற்றும் சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இச்செய்தியாளர் சந்திப்பில், யாழ்.மாநகர சபையினரால் யாழ்.நகரில் குறித்த பகுதியில் நிர்மாணிக்கப்படும் ஐந்து மாடிக் கட்டடத்தொகுதியின் ஒப்பந்தம் குறித்த ஆவணங்கள், மாதிரிப் படம் மற்றும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட யாழ்.மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கையொப்பமிட்ட ஆவணமும் பத்திரிகையாளர்களிடம் காண்பிக்கப்பட்டது.

இதன்போது குறித்த ஊழல் குற்றச்சாட்டை உதயன் பத்திரிகை நிறுவனம் நிரூபிக்கும் வரை அப்பத்திரிகையை யாழ். மாநகரசபை வளாகத்திற்குள் எடுத்துவர அனுமதி மறுக்கப்படுவதாக முதல்வர் அறிவித்தார். (பா,கா)

# இதய அஞ்சலிகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1925 | 2011 |
| 09 | 04 |
| 25 | 05 |



## ஆறுமுகம் விநாயகமூர்த்தி

தினமுரசு குடும்பத்தில் ஒருவராக எம்மோடு இணைந்து பணியாற்றி வருகின்ற செந்தில்குமரன் அவர்களின் தந்தை திரு. ஆறுமுகம் விநாயகமூர்த்தி அவர்கள் மரணமடைந்த செய்தி எங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆறுமுகம் விநாயகமூர்த்தி அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எமக்குக் கிடைக்காது விட்டாலும், அவரது புதல்வன் செந்திலுடன் நெருங்கிப் பழகுபவர்கள் என்ற வகையில் செந்திலிடம் காணப்படும் கடமையுணர்வும், தொழில் பக்தியும், ஏனையவர்களுடன் பழகுகின்ற பணிவான குணாம்சங்களும் அவரின் தந்தையுடைய விம்பங்களாகவே இருக்கும் என்றவகையில் இந்த சமூகம் ஓர் சிறந்த மனிதரை இழந்து நிற்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எனவே, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தினமுரசுக் குடும்பம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவர்களின் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்கின்றது.

(இ) தினமுரசு குடும்பத்தினர்

NALIN Information Technologies Pvt Ltd

Nalin Information Technologies Pvt Ltd

195/4, Parameswara Junction, Palaly Road, Thirunelvely.

எமது கணனி நிறுவனத்தில் புதுவருடத்தை முன்னிட்டு என்றும் இல்லாத வகையில் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கணனிகளிற்கு 10% விலைக்கழிவுடனும், கணனி உபகரணங்கள் மிக குறைந்தளவு விலையிலும் வழங்கப்படவுள்ளது.

தொடர்பிற்கு:- நேரில் or தொலைபேசி ஊடாக

T.P No:- 021 222 1166 or 0777667974

(C/516)



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**08) சுருக்கமான விடை தருக?**

01. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக?

    1)........................ 2)........................

02. தாவர உண்ணிகள் இரண்டு தருக.

    1)........................ 2)........................

03. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.

    1)........................ 2)........................

04. தோற்கருவிகள் இரண்டு தருக?

    1)........................ 2)........................

05. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக?

    1)........................ 2)........................

06. பூரணமான உணவுகள் இரண்டு தருக.

    1)........................ 2)........................

07. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக?

    1)........................ 2)........................

**09) பின்வரும் பந்தியை வாசித்து 1-6 வரையான வெற்றிடங்களில் நிகழ்வு பற்றித் தொடர்ந்து எழுதுக.**

அன்று வழமைபோல் ஆதவனும் கீழ் வானில் மலர்ந்துவிட்டான். என்றும் போல சகல விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எமது வீடு அமைந்திருந்தது கடற்கரைப் பிரதேசம் என்பதால் கடலலையின் ஓசை வழமைபோல் கேட்ட வண்ணம் இருந்தது. நான் மேசையில் அமர்ந்து எனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய எனது தந்தை வேகமாக வந்தார். வந்ததும் இன்றைக்கு நான் கடலைப் பார்த்தேன். கடலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் அலையின் பேரொலியும், ஏதோ வெடித்த சத்தமும் எம்மை அதிரவைத்தது. உடனே நானும் எனது பெற்றோரும் பதற்றத்துடன் வெளியே ஓடி வந்தோம். என்ன அமைதியாக இருந்த கடல் அன்னை பொங்கியெழுந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் பொங்கி வந்த கடல் அன்னை திடீரென்று தன்னை உள்வாங்கிவிட்டாள். என்ன! ஆச்சரியம்........................கடலும் பாறைகளும் படிந்த தரையாகக் காட்சியளித்தது. ஆனால் கண்ணிமைப்பதற்குள்ளே........................

★ இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

01. ........................................................

02. ........................................................

03. ........................................................

04. ........................................................

05. ........................................................

06. ........................................................

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 08



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் படரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!............என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்த சொல் தருக?

    ........................................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக?

    ........................................................

03. பந்தியில் காணப்படும் அடுக்கு மொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

    ........................................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.

    ........................................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாய் எழுதுக?

    ........................................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக?

    ........................................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொல் தருக?

    1) விண்மீன்:........................ 2) ஆதவன் :........................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

    ........................................................

    2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.

    ........................................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

    1) மலர் :........................ 2) பாடசாலை :........................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.

    ........................................................

**02) பின்வரும் வாக்கியங்களை இணைத்து எழுதுக?**

01. மாலா பாடசாலைக்கு ஆயத்தமானாள்.
மாலா பஸ் வண்டியில் புறப்பட்டாள்.

..............................................................................................

..............................................................................................

02. மயூரன் மைதானத்தில் விளையாடினான்.
கண்ணன் மைதானத்தில் விளையாடினான்.

..............................................................................................

..............................................................................................


**03) கீழே தரப்பட்ட தமிழ்ச் சொற்களை ஒத்த சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் பிழையின்றி எழுதுக.**

01. அதிபர் :.............................. 02. புத்தகம் :..............................

03. மாம்பழம் :.............................. 04. மேசை :..............................

**04) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதற்கு அமைவாகக் கீழே தரப்பட்டிருக்கும் காசுக்கட்டளைப் படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்து எழுதுக.**

கொழும்பு 6 "முருகன் இல்லம்" இலக்கம் 18, பிரதான வீதியில் வசிக்கும் திரு.அ.அகிலன் என்பவர் பேராதனை வீதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் தனது மகனான அ.தர்சனனுக்கு 5000 ரூபா பணத்தைக் கொழும்பிலிருந்து 16.10.2006 அன்று அனுப்புகிறார்.


(M 8* S.T.&E.) 11/83
P.O.C.
உள்நாட்டுச் சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்
APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER
No.
AMOUNT Rs. c.
Rupees (in Words)
Payable at
Name of Receipient (with initials)
Name of Remitter (with initials)
Address of Remitter
Date
Signature





**05)** **14.50** கடிகாரத்தில் காணப்படும் நேரம் முற்பகலா? பிற்பகலா? என்பதை எழுதுக.

**06) வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் சிற்றுண்டி வகைகள் தொடர்பான தகவல்கள் சலாகை வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக?**




01. மிகக் கூடுலானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................................................................................

02. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................................................................................

03. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக் குறைந்தளவானோர் விருப்புக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..............................................................................................

04. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவை 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

05. ஒரு புகை வண்டியில் 166 பிரயாணிகள் பயணம் செய்தனர். அடுத்த புகையிரத நிலையத்தில் அப்புகை வண்டியில் இருந்து 166 பிரயாணிகள் இறங்கினர். தற்போது புகை வண்டியில் பயணித்த பிரயாணிகள் எண்ணிக்கை யாது?

..............................................................................................

06. வான் சாரதி ஒருவர் ஒரு கிலோமீற்றர் பயணம் செய்ய 300 ரூபா பணம் அறவிடுகிறார். குமார் என்பவர் 5 கிலோமீற்றர் தூரம் பயணத்தை மேற்கொள்ள எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?

..............................................................................................

**07) கீழே தரப்பட்ட பாடலில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி எழுதுக?**

அருமைமிக்க.............................................................. எழுதவே

ஆசையாக..............................................................கொள்ளுவேன்.